TO SHARE THE LIGHT

# தீபகச் சுடர்

அக்டோபர் 2025

தீபம் 14 சுடர் 5

தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



# தீபகத்திலிருந்து இறையாசீர்



அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,

## அக்டோபர் : அமைதி, செபம், மற்றும் செபமாலை மாதம்

அக்டோபர் மாதம் என்றாலே எப்போதுமே நமக்குக் கொண்டாட்டமானது, இம்மாதம் **"புனித செபமாலையின் மாதம்".** இம்மாதத்தில் நம் வீடுகள், பங்குகள், செபத்தால், மலர்களால், மின்விளக்குகளால், மாதாவின் பாடல்களால் மீண்டும் உயிர்ப்பெறுகின்றன. செபமாலை நம் முன்னோர்கள், பெற்றோர்கள், மற்றும் உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான நம்பிக்கையாளர்கள் பல நூற்றாண்டுகளாக செபமாலை சொல்லி வருகின்றார்கள். அந்த செபமாலை பக்தியை நாமும் கையில் எடுத்துக்கொண்டு, அன்னை மரியாளோடு இயேசுவின் வாழ்க்கைப் பாதையில் பயணம் செய்வோம்.

இன்றைய உலகம் எவ்வளவு வேதனைக்குள்ளாகியுள்ளது. காசா, உக்ரைன் போன்ற நாடுகளில் போர்கள் பல குடும்பங்களைப் பிளந்து, குழந்தைகளைத் தாய் தந்தையற்றவர்களாக ஆக்கியுள்ளன. நம் இந்தியாவில்கூட, கோடிக்கணக்கான மக்கள் உணவு, கல்வி, மரியாதை, வேலை ஆகியவற்றிற்காக போராடிக்கொண்டிருக்கின்றனர். சாதி, மொழி, மதம், வர்க்கம் என்ற பெயரில் பிளவுகள் இன்னும் வலுவாக உள்ளன. இதில் எப்போதுமே ஏழைகள், பெண்கள், குழந்தைகளே அதிகமாகத் துன்புறுத்தப்படுகிறார்கள், பாதிக்கப்படுகிறார்கள். இத்தகைய சூழலில் நம்மால் அமைதியாக இருக்க முடியாது. கிறிஸ்துவின் சீடர்களாக நாமும் பதிலளிக்க வேண்டும். அந்தப் பதிலின் முதல்படிதான் **"இந்த செபமாலை"** செபம்.

### மரியாள் நம்பிக்கையின் தாய் - அமைதியின் அரசி

செபமாலை என்பது வெறும் வார்த்தைகளைக் கூறுவது அல்ல, அன்னை மரியாளின் கையைப் பிடித்து, அவரின் மகனாகிய **"அமைதியின் அரசராம் இயேசுவிடம்"** (எசா. 9:6) நடத்திச் செல்லப்படுவதாகும். **திருத்தந்தை பிரான்சிஸ் : 'செபமாலை என் வாழ்நாளை எப்போதும் இறைவனோடு இணைத்துச் செல்கிறது. அது எளிய மக்களின் செபம் புனிதர்களின் செபம், என் இருதயத்தின் செபம் என்று கூறுகிறார்".**

செபமாலை என்பது அமைதிக்கான பக்தி முயற்சி. மகிழ்ச்சி, துக்கம், மகிமை, மற்றும் ஒளியின் மறையுண்மைகளைச் செபிக்கும்போது, மெதுவாக கிறிஸ்துவின் அன்பு, அமைதி நம்முள் வேரூன்றி வளர்கிறது, நம்மால் மன்னிக்க முடிகிறது, நம்பிக்கையுடன் வாழ முடிகிறது. அமைதியின் கருவிகளாக மாற முடிகிறது. **திருத்தந்தை 14ம் லியோ : "செபமாலையை நம்பிக்கையோடு சொல்லும்போது விண்ணுலகத் தாயின் உதவியைப் பெற மிகச் சிறந்த வழி"** என்று கூறுகிறார்.

## செபமாலை ஒரு அழகிய பாரம்பரிய செபம்

அக்டோபர் மாதம், நம் பங்குகளில் மாலை நேரங்களில் ஒரு சிறிய திருவிழாவைப்போல கொண்டாடுவார்கள். கற்பனைச் செய்துப் பாருங்கள். சூரியன் மறையும்பொழுது, குடும்பங்கள் ஒன்று கூடி ஒரு சிறிய மேசையை வைத்து, அழகாக ஒரு புடவைக்கொண்டு அலங்கரித்து, அருகிலுள்ள தோட்டத்திலிருந்து மலர்கள் எடுத்து வந்து, அன்னை மரியாளின் சுரூபம் மையத்தில் வைத்து, அதனருகே மெழுகுத்திரி ஏற்றி, தூபம் காட்டி, மாலைகள் தொடுத்து அக்கம் பக்கத்தினரை அழைத்து குழந்தைகள் முன்வரிசையில் அமர, தாய், தந்தையர்கள், செபமாலையைக் கையில் எடுத்துக்கொண்டு செபமாலை செய்து, மரியன்னையின் பாடல்களைப் பாடி, 'வாழ்க வாழ்க, வாழ்க மரியே" என்ற பாடலோடு செபமாலை முடிவடைகிறது. இதைத்தொடர்ந்து பங்குத் தந்தையும் வந்து வீடுகளை ஆசீர்வதித்து, அனைவரோடும் சேர்ந்து செபிப்பார். செபத்திற்குப்பின் எளிய தேனீர், சிறிய இனிப்பு மற்றும் பல வகையான உணவுகளை பகிர்ந்து, மகிழ்ந்து கொண்டாடுவர். இந்த செபமாலை பக்தி முயற்சி அன்பை, ஒற்றுமையை, சமூகத்தை, சகோதரத்துவத்தை வளர்க்கிறது. குழந்தைகள் இதன்மூலம் செபம் என்பது கடமையல்ல, வாழ்வின் கொண்டாட்டம் என்பதை கற்றுக் கொள்கிறார்கள்.

## அக்டோபர் மாத அழைப்பு

இம்மாதத்தில் ஒவ்வொரு குடும்பமும், பங்கும், சிறிய கிறிஸ்தவக் குழுக்களும் இந்த பாரம்பரிய பக்தி முயற்சியை மீண்டும் கொண்டாட தீபகம் உங்களை அன்புடன் அழைக்கிறது. நம் வீட்டில் செபமாலை செய்ய குடும்பமாய் ஒன்றுகூடுவோம். அக்கம் பக்கத்தினரை அழைப்போம். நம்மிடமுள்ள எளிய பொருட்களால் மாதாவை அலங்கரிப்போம். இறைவன் நம் உள்ளத்தைப் பார்க்கிறார், வெளி அலங்காரங்களை அல்ல, உலக அமைதிக்காக, போர்களால் பாதிக்கப்பட்டவர்களுக்காக, வறுமையில் வாடுவோருக்காக நம் இருதயத்தின் மாற்றத்திற்காக செபமாலையை பக்தியுடன் செபிப்போம்.

**"அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளின் மக்கள் என அழைக்கப்படுவர்"** (மத்.5:9) என இயேசு கூறுகிறார். **"அமைதி நம்முள் துவங்குகிறது. நாம் கூடி செபிக்கும்போது, நாமும் அமைதியின் கருவிகளாக மாறுகிறோம்". (திருத்தந்தை லியோ14).** இந்த அக்டோபர் மாதத்தை உண்மையான செபம், நம்பிக்கை, மகிழ்ச்சியின் மாதமாக மாற்றுவோம், அன்னை மரியாளிடம் நம் வீடுகளையும், பங்குகளையும், பிள்ளைகளையும், உற்றார், உறவினர், நண்பர்கள் ஒப்புக்கொடுத்து செபித்து, நம்மை அமைதியின் தூதுவர்களாகவும், இயேசு கிறிஸ்துவின் பிள்ளை வாழ இம்மாதத்தில் செபிப்போம்.

## செபம் - அமைதிக்கான அழைப்பு

செபமாலை அன்னையே, அமைதியின் அரசியே, இவ்வுலகிற்கு அமைதியை, சமாதானத்தை தந்தருளும். காசா, உக்ரைன் போர் நடக்கும் எல்லா பகுதிகளிலும் ஒற்றுமையையும், அமைதியையும் தந்தருளும். உலகில் வாடும் எளிய மக்களுக்கு நம்பிக்கையைத் தாரும், எங்கள் குடும்பங்களில், பங்கில், ஊரில், நாட்டில், நீதி, உண்மை, அமைதி, சமத்துவம் என்னும் விழுமியங்கள் நிலைக்கச் செய்தருளும். எங்களை அமைதியின் கருவிகளா மாற்றி, உமது பாதையில் வழிநடத்தியருளும். ஆமென்.

என்றும் அன்புடன்

*அருட்பணி.* **ஜேசுதாஸ்** *ச.ச*

*இயக்குநர் - தீபகம்*

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 01.10.2025 | குழந்தை இயேசுவின் புனித தெரேசா | 06 |
| 02.10.2020 | புனித காவல் தூதர்கள் | 07 |
| 04.10.2025 | அசிசி நகர் புனித பிரான்சிஸ் | 08 |
| 05.10.2025 | பொதுக்காலம் 27ம் ஞாயிறு திருப்பலி | 09 |
| 07.10.2025 | தூய செபமாலை அன்னை நினைவு | 11 |
| 12.10.2025 | பொதுக்காலம் 28ம் ஞாயிறு | 12 |
| 13.10.2025 | அருளாளர் அலெக்சாண்ட்ரீனா மரிய தக்கோஸ்தா | 14 |
| 17.10.2025 | அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் | 15 |
| 18.10.2025 | புனித லூக்கா நற்செய்தியாளர் | 17 |
| 19.10.2025 | பொதுக்காலம் 29ம் ஞாயிறு | 18 |
| 24.10.2025 | புனித அலோசியஸ் குவனெல்லா | 19 |
| 26.10.2025 | பொதுக்காலம் 30ம் ஞாயிறு | 21 |
| 28.10.2025 | புனிதர்கள் சீமோன், யூதா திருத்தூதர்கள் | 22 |
| 29.10.2025 | அருளாளர் தொன் மைக்கேல் ரூவா | 23 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| ஏழ்மையாய் வாழ்ந்த செல்வந்தர் அசிசி நகர் புனித பிரான்சிஸ் | 26 |
| அக்டோபர் மாத புனித தெரேசாக்கள் | 29 |
| அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி | 33 |
| திருஅவைச் செய்திகள் | 35 |

பகுதி-1

# வழிபாட்டு வழிக்காட்டி

# குழந்தை இயேசுவின் புனித தெரேசா

திருப்பலி
01.10.2025

## முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

*“புனிதம் என்பது நாம் இறைவனின் கைகளில் சிறியோராகவும்*
*தாழ்ச்சியுள்ளோராகவும் இருக்கிறோம் என்பதை உணர்வதாகும்”*
*- குழந்தை தெரேசாள்*

இறையேசுவின் இனியோரே, சிறுசிறு செயல்கள், செபங்கள், ஒறுத்தல் முயற்சிகள் செய்வதன் மூலமாகவும் நாம் இறைவனை அடையலாம். ஆன்மாக்களை மீட்கலாம் என்பதை எண்பித்துக் காட்டியவர்தான் இன்று நாம் விழாயெடுத்து சிறப்பிக்கும் புனித குழந்தை தெரேசா. இப்புனிதை பிரான்ஸ் நாட்டில் அலன்சோ என்ற ஊரில் பக்தியுள்ள கத்தோலிக்கக் குடும்பத்தில் ஒன்பதாவது குழந்தையாகப் பிறந்தார். இவரின் குழந்தை உள்ளம், ஆழ்ந்த தாழ்ச்சி, பலிப்பொருளாகத் தம்மைக் கருதி அதன்படி நடப்பது, இறையன்பு, இறைநம்பிக்கை, பிறரன்பு ஆகிய புண்ணியங்களில் தலைச் சிறந்து விளங்கினார்.

துறவற வாழ்வில் ஒன்பது ஆண்டுகளே இறைப்பணியாற்றினார். இருப்பினும் இந்த ஒன்பது ஆண்டுகளிலும் கார்மேல் மடத்தில் சிலுவைகள் நிறைந்த இப்புனிதையின் வாழ்வு ஒரு மறைச்சாட்சி வாழ்விற்குச் சமமாக இருந்தது. இப்புனிதையைப் பொறுத்தமட்டில் சிறியவழி என்பது குழந்தையின் மனநிலையில் இறைவன்மீது நம்பிக்கை வைத்துத் தன்னை முழுமையாகக் கையளிப்பதும், இயேசுவோடு இணைந்து வாழ்வதும் ஆகும். குழந்தை தெரேசா தான் வாழ்ந்த காலத்தில், நகருக்கருகில் பிரான்சினி என்ற குற்றவாளி சிறையில் இருப்பதையும், அவன் இறைவனை வசைமொழிகளால் சபிப்பதையும் கேள்வியுற்று அவன் மனந்திரும்ப அவனுக்காக அதிகமாகச் செபித்தார். சில நாட்களுக்குப்பின் அவன் மனந்திரும்பி சிலுவையை முத்தமிட்டதையும், மனமாற்றத்துடன் இறந்தான் என்பதையும் கேள்வியுற்று மிக்க மகிழ்ச்சியடைந்தார்.

குழந்தை தெரேசா கன்னியர் மடத்திலேயே இருந்தாலும் தனது செப வழியாகிய சிறிய வழியின் மூலம் எண்ணிலடங்கா ஆன்மாக்களை மீட்டார். எனவேதான் இவர் புனித சவேரியாருக்கு இணையாகக் கருதப்பட்டு மறைச்சாட்சியாக வேதபோதக நாடுகளின் பாதுகாவலியாக நியமிக்கப்பட்டார். இவர் எலும்புருக்கி நோயினால் தாக்கப்பட்டு 24ம் வயதில் விண்ணுலகு எய்தினார். புனித குழந்தை தெரேசாவின் விழாவினைச் சிறப்பிக்கும் நாம் இப்புனிதையின் திருவுருவத்தைப் பார்த்து நம்முடைய வேண்டுதல்களைச் சமர்ப்பித்து, அவரின் புனிதத் தன்மையை உணர்ந்து நம்முடைய வாழ்விலும் சாட்சிய வாழ்வு வாழ இத்திருப்பலியின் வழியாக மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, இத்திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், பொதுநிலையினர்

அனைவரும் இயேசு விட்டுச்சென்ற மீட்புப் பணியினை மனந்தளராமலும், உற்சாகத்தோடும் தொடர்ந்து செயலாற்ற இவர்களுக்குத் தேவையான உடல்பலத்தையும், ஆன்ம நலனையும் அளித்து, கிறிஸ்துவின் அரசாட்சியை இவ்வுலகில் நிலைநிறுத்திட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, அன்பே எனது தேவ அழைத்தல் என்று கூறி இறைவனுக்குத் தன்னை அர்ப்பணித்த புனித குழந்தை தெரேசாவைப்போல், எம் குடும்பங்களிலும், தங்கள் குழந்தைகளை இறைபக்தியில் சிறந்தவர்களாக வளர்த்து, இறைப்பணிக்காக குழந்தைகளை தாராள உள்ளத்துடன் கையளிக்க முன்வர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. நன்மையே உருவான இறைவா, சிறு சிறு நன்மைகளைச் செய்து அதன்மூலம் புனிதையான குழந்தை தெரேசாவைப்போல நாங்களும் தாழ்ச்சி, பொறுமை, ஒறுத்தல் முயற்சிகள் அனைத்தையும் எங்கள் வாழ்வில் கடைப்பிடித்து புனிதத் தன்மையோடு உம்மைப் பின்பற்றி வாழவும் பிறருக்காக தங்களின் வாழ்வில் பல நல்ல செயல்களைச் செய்யும் மனம் கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.



## புனித காவல் தூதர்கள்

திருப்பலி
02.10.2025

### முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

கிறிஸ்து இயேசுவில் பிரியமானவர்களே, இன்றைய தினம் நம்மை நாள்தோறும் இறைவனின் ஞான ஒளியில் காத்து வழிநடத்தும் காவல்தூதர்களை சிறப்பிக்க நம் திருஅவை நம்மை அழைக்கிறது. வானதூதர்கள் கோடானகோடி பேர் உள்ளனர். அவர்கள் எந்நேரமும் துதித்து போற்றிக்கொண்டே இருப்பவர்கள். அவர்களில் காவல்தூதர்கள் என அழைக்கப்பட்டவர்கள் கடவுளின் கட்டளையை ஏற்று மனிதர்களுக்குக் காவல் நிற்கும் அரிய பணியைச் செய்து வருகிறார்கள். ஒவ்வொரு மனிதருக்கும் ஒவ்வொரு காவல் தூதரை தந்தையாகிய கடவுள் நியமித்துள்ளார் என்றும் அவர் அம்மனிதரின் வாழ்நாள் முழுவதும் அவருடன் இருக்கிறார் என்றும் நம் திருமறை கற்பிக்கிறது.

நம் காவல்தூதர்கள் தீயோனின் தாக்குதல்களிலிருந்தும் ஆன்மாவிற்கும், உடலுக்கும் ஏற்படக்கூடிய தீமைகளிலிருந்தும் குறிப்பாக, பாவ சந்தர்ப்பங்களிலிருந்தும் நம்மைக் காக்க முயல்கின்றனர். புண்ணிய வழியில் நாம் நடக்க நம்மை ஊக்குவிக்குகிறார்கள். நாம் தவறி விழும் நேரங்களில் நம்மை எழுப்பி உதவி புரிகிறார்கள். நமக்காக பல நல்ல செயல்களையும் செபங்களையும் கடவுள்முன் சமர்ப்பிக்கின்றார்கள். மரண நேரங்களில் நம்மைக் காப்பாற்றியும், தூயவராய் இறக்கவும் உதவி புரிகிறார்கள். நாம் உத்தரிக்கிற இடத்திற்குச் செல்லும்போது நமக்காகச் செபிக்க மற்றவர்களைத் தூண்டுகிறார்கள்.

"நாம் பலவீனமான மனிதர்கள். நாம் பயணப்பட வேண்டிய பாதையோ நீண்டது, கடினமானது, நாம் அச்சமுறத் தேவையில்லை. மிகுந்த பிரமாணிக்கமுள்ள விவேகம் நிறைந்த வல்லமைக் கொண்ட காவல்தூதர்களை நம்மை வழிநடத்த விடுவோமானால் நாம் அச்சமின்றி வாழலாம்" என்று புனித எரோணிமுஸ் கூறுகிறார். ஆகவே நம் காவல்தூதர்களுக்கு கீழ்ப்படிந்து நம்மோடு என்றும் இருக்க இத்திருப்பலி வழியாக செபிப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. உலகின் ஒளியே இறைவா, எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர் அனைவரும் நம் இயேசு நமக்களித்த திருஅவையையும், திருமறைநூலையும் பக்தியுடனும், நம்பிக்கையுடனும், நன்றியுடனும் போற்றி அவற்றின்படி சாட்சிய வாழ்வு வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
2. ஞானத்தின் ஊற்றே இறைவா, எங்கள் ஒவ்வொருவருக்கும் உமது காவல் தூதர்களை அளித்து வழிநடத்தி வருவதுபோல், நாங்களும் எங்கள் குடும்பங்களில், அருகிலுள்ளோர், தேவையில் இருப்போருக்கு உதவி செய்யும் நல்லுள்ளத்தை அளிக்கவும், உமது குரலுக்குச் செவிமடுத்து வாழும் ஞானத்தைத் தந்தருளை வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. படைப்பின் நாயகரே, எம் குடும்பத்தில் வளரும் இளம் தலைமுறையினர் சாத்தானின் சோதனைக்கு உட்படாமல் திருமறை நூலை கையிலெடுத்து பக்தியுடன் படிக்கவும், அதன்படி வாழவும் நல்ல சிந்தனைகளை அவர்களுக்கு உம் காவல் தூதர்களின் வழியாக பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# அசிசி நகர்ப் புனித பிரான்சிஸ்

திருப்பலி
04.10.2025

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

இறை இயேசுவின் அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே, இன்று திருஅவையானது அசிசி நகர் புனித பிரான்சிஸ் அவர்களின் திருவிழா திருப்பலிக்கு நம்மை அன்புடன் அழைக்கிறது. இந்தப் புனிதர் இத்தாலியில் அசிசி நகரில் 1182ம் ஆண்டு பிறந்தார். இவருடைய தந்தை மிகப் பெரிய செல்வந்தர். ஆகவே, நம் புனிதர் ஆடம்பர வாழ்வு வாழ்ந்தார். பிரான்சிஸ் 1201ல் பெருஜியாவுக்கு எதிரான போரில் இராணுவ வீரராக களம் கண்டு, கைதாகி சிறையில் அடைக்கப்பட்டார். சிறையிலிருந்தபோது ஆன்மீகத்தில் தெளிவு பெற்றார். ஏழைகளுக்கு உதவி செய்ய முன்வந்தார். இவர் ஆலயம் ஒன்றில் செபித்துக் கொண்டிருந்தபோது இயேசு காட்சி கொடுத்து, "எனது ஆலயம் பழுதடைந்து உடைந்து விடும் நிலையில் இருக்கிறது, நீ அதனைப் பழுதுபார்" என்றுரைத்தார்.

1209, பிப்ரவரி 24ம் தேதி நடந்த திருப்பலியில் குருவானவர் மத் 10:9 இறைவார்த்தையைக் குறிப்பிட்டு மறையுரை நிகழ்த்தினார். அதனைக் கேட்டுக்கொண்டிருந்த இப்புனிதர் அனைத்தையும் விட்டுவிட்டு வெறுங்காலுடன் நடக்க ஆரம்பித்தார். இவர் பறவைகளையும், மரங்களையும் இயற்கையையும் அதிகமாக நேசித்தார். தாழ்ச்சி என்ற புண்ணியத்தை மணிமுடியாகச் சூட்டிக் கொண்டார். 1223ம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவை ஒரு மாட்டுக்கொட்டிலில் மாடு மற்றும் கழுதையை வைத்து முதன் முதலில் குடில் அமைத்தார். ஆண்டவரே, "நான் இறக்கும்முன் உம்பாடுகளை என் உடலில் அனுபவிக்க ஆசைப்படுகிறேன் எனக்குத்தாரும்" என்று செபித்தபோது இவரது உடலில் இயேசுவின் ஐந்து திருக்காயங்களும் பதிந்தன. இந்தப் புனிதர் 1226, அக்டோபர் 3ம் நாள் இறந்தார். இவர் "சுற்றுப்புறச் சூழலின் பாதுகாவலர்" என்று அழைக்கப்படுகிறார். இந்தப் புனிதரின் வழியில் நாம் சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்க உறுதியெடுத்து திருப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. உமது வார்த்தையை அனுப்பி குணமளிக்கும் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் அனைவரும் பயணம் செய்யும் திருஅவையின் அங்கத்தினர்களாக இருந்து இறைமக்களை இறைவனின் நீதி, நேர்மை போன்ற விழுமியங்களின்படி வழிநடத்த அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. ஏழைகளின் வாழ்வை மலரச் செய்பவரே, உலக நாடுகளின் தலைவர்கள், எம் இந்தியத் தலைவர்கள் அனைவரும் தன்னலமின்றி தொண்டுள்ளம் கொண்டவர்களாய் ஏழை மக்களின் நல்வாழ்வையே மனதில் கொண்டு நீதியின் பாதையில் நேர்மையுடன் பணிசெய்ய நல்ல மனதைத் தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. நற்கருணையில் பிரசன்னமாயிருக்கும் இயேசுவே, குடும்ப வாழ்க்கைப் பயணத்தில் அனைத்து குடும்பத்தினரையும் உம் அன்பின் அரவணைப்பில் சமாதானத்தோடும் ஒற்றுமையோடும் வாழச் செய்தருள வேண்டுமென்றும், உமது பிரசன்னம் ஒவ்வொரு குடும்பத்திலும் தங்கி வழிநடத்த வேண்டுமென்றும் உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 27ம் ஞாயிறு

திருப்பலி
05.10.2025

## முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

I. *அபக்கூக்கு 1: 2-3, 2: 2-4* II. *2திமொ. 1: 6: 6-8, 13-14* *லூக். 17: 5-10*

இறையேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, கண்ணில் காணா இறைவன்மீது நாம் கொள்ளும் பற்றுறுதியே நம்பிக்கை. வாழும் வாழ்வில் நாளை என்ன நடக்குமென்பதை அறியாத மனிதன் பொருள்தேடி அலைந்து திரிந்து சேர்த்து வைப்பது நாளை அதைக்கொண்டு உண்டு குடித்தி

மகிழ்வேன் என்று எண்ணவது தம்மீது அவன் கொண்டுள்ள நம்பிக்கை. மரக்கிளையின்மீது அமரும் பறவை கிளை முறிந்தாலும் நான் பறந்து தப்பித்து பிழைத்துக்கொள்வேன் என்று தன் சிறகுகளின்மீது அப்பறவைக் கொண்டுள்ள நம்பிக்கை. அதைப்போன்று நாமும் இறைவன்மீது கொள்ளும் நம்பிக்கை எவ்வாறு இருக்கவேண்டுமெனில், தன் தாயின் கரங்களைப் பற்றிக்கொண்டு நடக்கும் குழந்தை எந்தவிதமான பய உணர்வும் இல்லாமல் எதைப்பற்றியும் கவலையில்லாமல் ஆனந்தமாக தன்னை சுற்றியுள்ள யாவற்றையும் கண்டு ஆனந்த நடைப்போடுவதைப் போன்று அமைய வேண்டும். இறைநம்பிக்கை ஒருவரை இவ்வுலகத் தீமைகளிலிருந்தும், குழம்பிய மனபோக்கிலிருந்தும் விடுவித்து கண்ணுக்கு புலப்படாத கடவுளின்மேல் ஆழமான பற்றுக்கொள்ளச் செய்கின்றது. இறைவன்மீது கொண்டுள்ள பக்தியின் அடையாளம் தான் நம்பிக்கை நம் மன்றாட்டுக்களை இறைவனிடம் சமர்ப்பித்துவிடுவோம். ஆனால் அவை கிடைக்குமா, கிடைக்காதா என்ற சந்தேகத்துடன் இருந்தால் அது இறைபக்தியில் சேராது. கடுகளவு விசுவாசகம் இருந்தால் மலையையும் என்னால் பெயர்த்தெடுக்க முடியுமென்று இறைவன்மீது ஆழ்ந்த நம்பிக்கைக் கொண்டிருக்க வேண்டும்.

காலம் தாழ்த்தினாலும் உன்னைக் காத்து வழிநடத்த உன்னோடு நானிருக்கிறேன் என்பதை உணர்த்தும் விதமாக இன்றைய வாசகங்கள் மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் நடக்கும் அழகிய உரையாடலாக அமைந்துள்ளது. இன்றும் இறைவார்த்தை வழியாக நம்மோடு உரையாடிக் கொண்டிருக்கும் இறைவார்த்தைக்கு செவிமடுப்போம். அன்று சீமோன் பேதுரு இயேசுகிறிஸ்துவின் வார்த்தையின்மீது நம்பிக்கைக்கொண்டோர் அளவில்லாத மீன்களைப் பிடித்தார். இறைவனின் வார்த்தை நம் வாழ்விலும் செயல்வடிவம் பெற வேண்டும். நாமும் இறைவனின் வார்த்தையில் நம்பிக்கைக் கொண்டவர்களாக பல நலன்களையும், வளங்களையும் பெற்று வாழ்ந்திட இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் நாயகனே எம் இறைவா, உம்மீது அளவற்ற பற்றுக்கொண்டு தங்கள் வாழ்வினையே உமக்களித்த எம் திருத்தந்தை, ஆயர்கள், கர்தினால்கள், குருக்கள், துறவறத்தார் என்றும் உமக்கு உண்மையுள்ள ஊழியர்களாக விளங்கவும், தாங்கள் ஏற்றப்பணியினை திறம்பட செயல்படுத்தவம், இறைப்பணியில் இறுதிவரை நிலைத்திருந்து தங்கள் பணியாலும், புனித வாழ்வாலும் திருஅவைக்கு என்றும் நற்கனிதருபவர்களா வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, உலக நாடுகளில் எங்கம் அமைதியின்மை பெருகிவருகின்றது. எங்கு பார்த்தாலும் போர் நாடுகளுக்கிடையே தாக்குதல்கள் நடைபெறுகின்றன. இதனால் பசியும், பஞ்சமும் தனிமையில் தனிப்போர் பலவாறான சிக்கல்களைச் சந்திக்கின்றனர். இந்நிலை மாறி நாடுகளை ஆளும் தலைவர்கள் ஒவ்வொருவரும் தங்களின் ஆட்சியைப் பயன்படுத்தி நாட்டை சீரழிப்பதை நிறத்தி நாட்டில் வளமையும், செழிமையும், ஒற்றுமையும் ஏற்பட

அவர்களுக்குத் தேவையான நல்ல சிந்தனையை எண்ணத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணைக்கடலே எம் இறைவா, இந்திய திருநாட்டில் நாளுக்கு நாள் ஜாதி சண்டைகளும், மதப்பிரச்சனைகளும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. சுதந்திர நாட்டில் பெண்கள், குழந்தைகள் சுதந்திரமாக வாழ இயலாத அச்சமான சூழ்நிலைகளும் வேலைவாய்ப்பின்றி தவிப்போரும் அதிகரிக்கின்றன. கல்வியும், மருத்துவமும் பணத்தை மையமாகக் கொண்டே செயல்படும் நிலை உருவாகிக் கொண்டிருக்கின்றன. இந்நிலைமாறி நாட்டில் நல்ல தலைவர்கள் உருவாகிட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நம்பிக்கையின் நாயகரே, நாட்டிலுள்ள இளைய தலைமுறையினரை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் எதிர்கால வாழ்வை கருத்தில்கொண்டு தெய்வ பயத்திலும், இறைவாழ்விலும் தங்களை முழுமையாக அர்ப்பணித்து தூய ஆவியின் அருட்கொடைகளைப் பெற்று வாழவும், அறிவியல் வளர்ச்சிக்கு தங்களை உட்படுத்திக்கொண்டு சீரழிந்துவிடாமல் உம் பாதையில் தங்களை வழிநடத்திச் செல்ல போதுமான ஞானத்தையும், உடல்உள்ள நலனையும் அளித்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# செபமாலை அன்னை விழா

திருப்பலி
07.10.2025

## முன்னுரை

*திரு. ஜீசஸ் மகுட மன்னன்*

இறை இயேசுவின் நம்பிக்கையாளர்களே, நமது தாயாம் திருஅவை புனித செபமாலை அன்னையின் திருவிழாவை உலகமெங்கும் கொண்டாடுகிறது. செபமாலை அன்றுமுதல் இன்றுவரை மத, இன வேறுபாடின்றி அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு தனி செபமாகவும், பொதுச் செபமாகவும் குடும்ப செபமாகவும் சொல்லப்படும் ஒரே செபம் செபமாலை என்பதில் எந்த ஐயமுமில்லை. 1213ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டில் ஆல்பிஜென்சியன் என்ற தப்பறைக் கொள்கையாளர்களை எதிர்த்து செபமாலைச் செபித்ததன் மூலம் "மியூரே" (Muret) என்ற இடத்தில் நடந்தபோரில் வெற்றிக் கிடைத்தது. இது 1214ம் ஆண்டு புனித சாமிநாதர் என்பவரால் வளர்க்கப்பட்டது. 1517ம் ஆண்டு அக்டோபர் 7ம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று லெபந்தோ போரில் துருக்கியர் தோற்கடிக்கப்பட்டது இந்த செபமாலையினால் தான். இப்போரில் தலைமைத் தாங்கிய திரு. டான் ஜூவன், இம்மாபெரும் வெற்றிக்குக் காரணம் செபமாலை செபித்ததினால்தான் என்று உறுதியுடன் கூறினார்.

திருத்தந்தை 5ம் பத்திநாதர் இந்நாளை "வெற்றியின் அன்னை மரியா" என்று பறைச்சாற்றினார். திருத்தந்தை 13ம் கிரகோரியார், இந்நாளை "செபமாலை மாதா திருவிழா" எனக் கொண்டாடப் பிரகடணப்படுத்தினார். போரில் வெற்றிப் பெற்றதற்கு மட்டுமல்ல, போர் சூழலைக் கட்டுப்படுத்தவும் செபமாலை ஒரு கருவியாக இருந்தது. கி.பி.1915ல் ஆஸ்திரியா நாட்டின்மீது

சோவியத் ரஷ்யா பனிப்போர் நடத்திய நேரத்தில், ஆஸ்திரியா நாட்டு மக்கள் செபமாலைமீது நம்பிக்கை வைத்து செபிக்க சோவியத் படைகள் தன்னிச்சையாகவே வெளியேறின. அன்னை தெரேசா எங்கு சென்றாலும், செபமாலைச் சொல்லிக் கொண்டேயிருப்பார். தம் பணிகளில் பலம் தந்து துணை நின்றதாக சொல்வார். திருத்தந்தை ஆதிரியான் "செபமாலை தீயவனின் சக்தியை விலக்கும்" என்கிறார். எனவே இத்திரு செபமாலையைத் தினந்தோறும் செபித்து தியானிக்கின்றவர்களாய் வாழ அருள்வேண்டி இன்றைய திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. என்றென்றும் வாழும் அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை பிரான்சிஸ், கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், வேதியர்கள், மற்றும் பொதுநிலையினர் அனைவரும் தங்கள் இறையழைத்தல் வாழ்வில் முழுமையாக தங்களையே அர்ப்பணித்து, உமக்கேற்ற பாதையில் நாளும் நடக்க, செபமாலையே ஒரு கருவி என்பதை ஏற்று வாழும் நல்லுள்ளம் கொண்டு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
2. பிறர் வாழ செபிப்போரை ஆசீர்வதிக்கும் இறைவா, எம் நாட்டுத்தலைவர்களுக்கு உடல் உள்ள நலனைத் தந்தருளவும், மக்கள் எங்கெல்லாம் தேவையில் இருக்கின்றார்களோ அங்கெல்லாம் உதவிக்கரம் நீட்டும் பரந்த மனதைத் தந்தருள வேண்டுமென்று செபமாலையை ஒப்புக்கொடுத்து செபிக்கும் தாராள மனதை எங்களுக்குத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.
3. கடவுளால் இயலாதது ஒன்றுமில்லை என்பதை உணந்தவர்களாக நாங்கள், விசுவாசத்தில் நிலைத்து நின்று மரியாளைப்போல் வாழவும், நிலையான வாழ்வைத் தரும் ஆவிக்குரிய வழியில் நடக்கவும், வாழ்வில் ஏற்படும் வறுமை, பிணி, கடன் தொல்லைகள் நீங்கவும், குடும்பங்களைப் பாதுகாக்கவும், இளைய சமுதாயத்தை உம்வழியில் நடத்தவும், வேலை வாய்ப்புகள் பெருகச் செய்யவும் வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 28ம் ஞாயிறு

திருப்பலி
12.10.2025

## முன்னுரை

*திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *2அர. 5: 14-17* II. *2திமொ. 2: 8-13* *லூக். 17: 11-19*

இறையேசுவின் இனிய திருக்குலமே, நன்றியுணர்வே நற்பண்புகளின் தாய். நன்றியுள்ளவர்கள் நெஞ்சில் கடவுள் வாழ்கிறார். நன்றி சொல்ல வந்திருக்கும் நல்லுள்ளங்களே, உங்கள் அனைவரையும் திருஅவை அன்புடன் அழைக்கிறது. இன்றைய முதல் வாசகத்தில் சிரியா அரசனின் படைத்தலைவரான நாமானின் நம்பிக்கை அவரது நோயிலிருந்து விடுதலை கொடுத்தது. ஆந்த நம்பிக்கை இஸ்ரயேலரின் கடவுள் யாவே தவிர வேற

எந்தக் கடவுளும் இல்லையென்று அவரை அறிக்கையிடச் செய்கிறது. யாவே ஒருவரே கடவுள். உண்மையில் கடவுள் என்று நாமான் நம்பினான். எது உண்மை? பலியல்ல, கீழ்ப்படிதலே சிறந்தது என்று கூறுகிறது. இரண்டாவது வாசகம், இயேசுவோடு நாம் இறந்தால் அவரோடு வாழ்வோம். அவரோடு நிலைத்திருந்தால் அவரோடு ஆட்சி செய்வோம் என்று தன் ஆழமான நம்பிக்கையை பவுலடியார் உறுதியாக பதிவு செய்கிறார். தன் வேதனையை ஒரு பொருட்டாக எண்ணாமல் இயேசு கிறிஸ்துவுக்காக அனைத்தையும் ஏற்றுக்கொள்ளும் புனித பவுலடியாரின் மனநிலை நமக்குள் நிலைக்கவும், இவரில் நாம் வாழ முயற்சி செய்வோம்.

இன்றைய நற்செய்தியின்படி பத்துதொழுநோயாளர்கள் சுகம் பெறுகிறார்கள். ஒன்பதுபேர் அப்படியே சென்றுவிட ஒருவர் மட்டுமே நன்றி சொல்ல இயேசுவிடம் வருகிறார். அதுபோல நம்மில் நன்றியுணர்வு ஒன்று வரும்போது அதை அழுத்தி, புதைத்துவிட என்பது பிற எண்ணங்கள் நம்மிலே எழுந்துவரும். இதனால் நாம் நன்றி சொல்லும் நேரங்களைவிட நம் கோபதாபங்களையும், கவலைகளையும் சொல்லும் நேரம்தான் அதிகம். இங்கு இயேசு தொழுநோயாளர்களைத் தொடவில்லை, மாறாக, "குருவிடம் சென்று உங்களைக்காட்டுங்கள்" என்று சொல்கிறார். இன்று நம்மை ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக குருக்களிடம் சென்று பாவமன்னிப்பு பெற்ற ஆன்ம நோயினின்று விடுதலை பெற இயேசு அழைக்கிறார். எத்தகைய நோயையும், குணமாக்குகிற, எந்த பாவத்திலிருந்தும், சாபத்திலிருந்தும் விடுதலைக் கொடுக்கின்ற ஆண்டவர் இயேசுவிடம் இந்தத் திருப்பலியில் முழுமையாக அர்ப்பணித்து நன்றியுள்ளம் கொண்ட வாழ்க்கை வாழ செபிப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நன்றியின் மேன்மையை எமக்கு உணர்த்தும் இறைவா, நீர் எமக்குகந்த திருஅவைக்காக நன்றி கூறுகின்றோம். திருப்பணியாளர்கள் ஆற்றும் திருப்பணி உம்மைக்கண்டு கொள்ளவும், உமக்குநன்றி செலுத்தும்போது உமது எல்லையற்ற அன்பையும் அருளையும் பெற்றுக்கொண்டு மீட்பின் பாதையில் எங்களை அழைத்துச்செல்ல உதவும் என்ற நன்றியின் உணர்வைத் தூண்டவும், அருள்பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. ஆன்ம நோயை குணமாக்கி நலமளிப்பவரே, எங்கள் ஒவ்வொருவரிலும் நீர் உடனிருந்து, உடலாலும் உள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட இறைமக்களுக்கு ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக நோய்நீங்கி மனஆறுதல் பெற்று நன்றிநிறை மனம் கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3 அனைவருக்கும் ஒரே நீதியை வழங்கிடும் எம் இறைவா, இன்று எம் நாட்டில் நிலவும், சுயநலம், மற்றவர்களை அடிமைப்படுத்தக்கூடிய ஆணவம், தற்பெருமை இவைகளை மறந்து எல்லா மாநிலமும் தங்களிடம் உள்ளதை தேவையில் இருப்பவர்களுக்கு பகிர்ந்தளித்து பரிவு, இரக்கம், கனிவு, அன்பு போன்ற உணர்வுகளை மனதில் கொண்டு அனைவரும் சகோதர

சகோதரத்துவ மனப்பான்மை கொண்டவர்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. நோயாளிகளைச் சந்திக்கத் தயங்காதே என்ற இறைவா, பல்வேறு நோய்களினால் துன்புறும் நோயாளிகளை உம்மிடம் ஒப்புக்கொடுக்கின்றோம். நோயினால் துன்புறுவதைவிட தன்னை கவனிக்க ஆளில்லாமல், ஆறுதல் வார்த்தைகள் சொல்ல யாருமில்லாமல், மனதளவில் பாதிக்கப்பட்டு வருந்துவோரை நாங்கள் தேடிச்சென்று ஆறுதல் வார்த்தைகளைப் பகிர்ந்து, செயல்படுத்த தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



## அருளாளர் அலெக்சாண்ட்ரீனா மரியா தக்கோஸ்தா

திருப்பலி 13.10.2025

### முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

அலெக்சாண்டிரீனா 1904ம் ஆண்டு மார்ச் 30ம் நாள் போர்ச்சுக்கல் நாட்டிலுள்ள ஓபோர்ட்டோ மாவட்டத்தில் பலசார் என்னும் ஊரில் அன்பும், ஊக்கமும் கொண்ட உழைப்பாளி குடும்பத்தில் பிறந்தார். இவர் தனது 14ம் வயதில் கற்பைக் காத்துக்கொள்ள, மூன்று முரடர்கள் பிடியிலிருந்து விடுபட இரண்டாம் மாடியிலிருந்து சன்னல் வழியாக கீழே குதித்தார். அவ்வாறு விழுந்ததன் காரணமாக ஏற்பட்ட காயங்களினால் உடல் முழுவதும் பலவீனமடைந்து நடக்க இயலாமல் 30 ஆண்டுகளாக படுக்கையிலேயே வாழ்வை வாழ வேண்டிய் நிலைக்குத் தள்ளப்பட்டார். தனது துன்பங்களையும், வேதனைகளையும் இறைவனுக்குப் பொறுமையோடு ஒப்புக்கொடுத்தார்.

இவர் 1938-1942ம் ஆண்டு வரை எல்லா வெள்ளிக்கிழமைகளிலும் இயேசுவின் பாடுகளில் பங்கு பெறும் பேற்றினைப் பெற்றார். உலக முழுமையும், மரியாளின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணிக்கும்படி திருத்தந்தை 12ம் பத்திநாதரை அணுகி இவர் பணிவோடு கேட்டுக்கொண்டார். அவருடைய விண்ணப்பத்திற்கிணங்க திருத்தந்தை 1942ம் ஆண்டு அக்டோபர் 31ம் நாள் உலக முழுமையும், மரியாளின் மாசற்ற இதயத்திற்கு அர்ப்பணித்தார். 1942ம் ஆண்டு மார்ச் 29ம் நாளிலிருந்து இறக்கும்வரை 13 ஆண்டுகளாக நற்கருணை மட்டும் உண்டு உயிர் வாழ்ந்தார். அருட்திரு உம்பர்த்தோ உதவியுடன் சலேசிய உடனுழைப்பாளராக மாறினார். இவர் தனது குறிப்பேட்டில் “சலேசிய உடனுழைப்பாளர்” என்ற நிலையில் உலகிலுள்ள எல்லா சலேசியருடனும் இணைந்து எனது துன்பங்களை இளைஞர் பணிக்காக ஒப்புக்கொடுக்கிறேன். நான் சலேசிய சபையை அதிகமாக அன்புச் செய்கிறேன்”, என்று எழுதி வைத்திருந்தார். 1955ம் ஆண்டு அக்டோபர் 13ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். “மனிதரின் மீட்பே இறைவனின் மகிமை” என்ற இலக்கோடு தனது வாழ்வை அர்ப்பணித்தார். திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை 2004ம் ஆண்டு ஏப்ரல் 25ம் நாள் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவரின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு நம்முடைய வாழ்வில் கற்புடையவர்களாக வாழும் உள்ளத்தைப் பெற இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. உம் கரங்களால் எங்களை தாங்கும் நல்லவரே, திருஅவையை வழிநடத்த நீர் தேர்ந்துக்கொண்டவர்களை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். தூய்மைக்கு இலக்கணமாக வாழ்ந்த அலெக்சாண்டிரீனா மரியாவைப்போன்று திருஅவையின் தலைவர்கள் அனைவரும், கிறிஸ்துவின் அன்பு நெறியிலும், ஒருங்கிணைந்த வாழ்க்கை முறையிலும் தூய உள்ளம் கொண்டு வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. இன்றைய இளைய தலைமுறையினர் அனைவரும் உண்மையான இறை நம்பிக்கையில் ஊன்றி வாழவும், இலட்சியத் துணிவோடு வாழ்வின் போராட்டங்களைச் சந்திக்கவும், நேர்மையான உள்ளத்தோடு பிறர் சேவையில் ஈடுபடவும், தங்களால் முடிந்தளவு பிறருக்கு உதவிக்கரம் நீட்டும் உள்ளம் கொண்டவர்களாக, இறையழைத்தல் பணிக்கு தங்களையே அர்ப்பணிக்கும் மனம்கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. அருளாளர் அலெக்சாண்டிரீனா மரியாவைப் பின்பற்றி சலேசிய உடனுழைப்பாளர்கள் அனைவரும் தாங்கள் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கேற்ப தூய உள்ளத்தோடும், அர்ப்பண உணர்வோடும், இவ்வுலகில் ஒளியாக நின்று, கிறிஸ்துவுக்காக நேர்மையான உள்ளமும், முழுமனதோடு உழைக்கும் உடல்வலிமையும் கொண்டு வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
4. வல்லமையுள்ள நற்கருணை நாதரே, நாங்கள் அனைவரும் இந்த நற்கருணைக் கொண்டாட்டத்தில் பங்கெடுப்பதன் வழியாக புனித வாழ்வுக்கு ஏற்றவர்களாகவும் நற்கனி தருபவர்களாகவும் வாழ்ந்து இறையாட்சிக்குச் சான்று பகரும் வாழ்வை எங்கள் வாழ்வில் கடைப்பிடித்து வாழ அருள்புரியுமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார்

திருப்பலி
17.10.2025

## முன்னுரை

*திருமதி. ராணிவில்சன்*

இறை இயேசுவில் வாழும் இனிய மக்களே, இன்றைய தினம் நாம் தூய அந்தியோக்கு இஞ்ஞாசியாரை நினைவில் கொண்டு சிறப்பிக்கிறோம். கி.பி. 35ம் ஆண்டு மார்ச் 15ம் நாள் சிரியா நகரில் பிறந்து இயேசுவின் சீடர் தூய யோவானின் சீடராக உருவானவர். கி.பி. 69ம் ஆண்டு நமது முதல் திருத்தந்தை தூய பேதுரு இவரின் மேன்மையை உணர்ந்து அந்தியோக்கியா நகரின் ஆயராக இவரை நியமித்தார். 40 வருட காலம் திருஅவையின் போதனையைத் திறம்படப் போதித்து வந்தார். மன்னன் தொமிசஸ் ஆட்சிக் காலத்தில் கிறிஸ்தவர்களை வதைத்துக் கொல்லும் கொடிய நேரத்திலும் பயப்படாமல் இறைவார்த்தையை எடுத்துரைத்தார். மன்னன் திராயன்

ஆட்சிப்பீடம் ஏறிய நேரம், இவரை சிறையிலடைத்து, கைக்கு கைவிலங்கிட்டு அழைத்து "நீர் யார்?" என்று கேட்க, அதற்கு புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார்" இயேசுவாகிய ஆண்டவரை என்னுள் சுமப்பவன்" என்று கூற "தியோடோஸ்" என்ற மரண தண்டனை அளித்தான். அதாவது மிருகங்களுக்கு இறையாக்குரைப்பது என்பது அதன் பொருள். பின் கப்பலில் ஏற்ற உரோமை கொலோசியன் அரங்கத்தில் அனைவரும் காணுமாறு இரண்டு சிங்கங்களுக்கு அவரை இறையாக்கினான்.

கப்பலில் சென்றபோது 7 மடல்களை ஆசியா, கிரேக்கம் ஆகிய நாடுகளுக்கு எழுதினார். அதில் பல போதனைகள் இடம் பெற்றிருந்தன. குறிப்பாக, "நான் ஆண்டவரின் கோதுமை, மிருகங்களின் பற்களால் அரையப்பட்டு ஆண்டவரின் தூய அப்பமாக மாறுவேன்" என்று எழுதியிருந்தார். ஒரு மடலில் "நற்கருணை கிறிஸ்துவின் சதை, நிலை வாழ்வின் மருந்து" என்று குறிப்பிட்டிருந்தார். அந்தியோக்கியாவின் 2வது ஆயரான இவர் காலத்தில்தான் கத்தோலிக்கம் என்ற வார்த்தை வழக்கத்திற்கு வந்தது. இவரின் சிந்தனையான "நமது உடல் கடவுளின் ஆலயம்" என்ற உயர்ந்த சிந்தனையைக் கொண்டு வாழ்ந்தார். இப்புனிதரின் விழாவைச் சிறப்பிக்கும் நாம் கிறிஸ்துவின் அன்பிற்கு நம்மையே அர்ப்பணிப்போம். நமது உடல் இறைவனின் ஆலயம் அதனைத் தூய்மையாகப் பேணிப் பராமரிக்கும் வரத்தை இத்திருப்பலியில் இறைஞ்சி மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் ஊற்றே எம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் ஆகிய அனைவரும், இயேசுவின் பொருட்டு கொடிய மிருகங்களின் பற்களில் அரைப்பட நேர்ந்த புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார் போன்று இக்கால கொடிய நோயாகிய லஞ்சம், ஏமாற்றுதல், அலைகழிப்பு, நம்பிக்கைத் துரோகம், படுகொலை போன்றவற்றை அழிக்கும் சக்தியை செபமாலை வழியாக இயேசுவின் அன்பு ஒருபோதும் அழியாது என்ற மனநிலையில் வாழ உம்மை மன்றாடுகிறோம்.
2. தாயும் தந்தையுமான இறைவா, இயேசுவின்மீது கொண்ட அளவில்லா அன்பின் காரணமாக அவரைத் தன் மனதில் சுமப்பவன் என்று பறைச்சாற்றிய புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார் போன்று எத்துன்பம் வந்தாலும் உயிரையே இழக்க நேரிட்டாலும் நாங்கள் உம்மீது அளவுகடந்த நம்பிக்கையோடு போராடி வாழ்வில் வெற்றிப்பெற வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. தூய ஆவியின் துணையாளரே எம் இறைவா, "நான் ஆண்டவரின் கோதுமை, கொடிய மிருகங்களின் பற்களில் அரையப்பட்டு ஆண்டவரின் தூய அப்பமாக மாறுவேன்" என்றுரைத்த புனிதரைப்போன்று தீராத நோய், வறுமையின் கொடுமை, தனிமையில் வாடுதல் போன்ற எந்நிலையிலும் நாங்கள் தூயவர்களாக, பரிசுத்த ஆலயமாக பிரதிபலிக்க வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.



# புனித லூக்கா திருத்தூதர் விழா

திருப்பலி
18.10.2025

## முன்னுரை

*திருமதி. பத்மாவதி*

"அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு"

கிறிஸ்துவின் அன்பார்ந்த சகோத சகோதரிகளே, இன்று நமது திருஅவை திருத்தூதர் புனித லூக்கா திருவிழாவைக் கொண்டாடுகிறது. இவர் சிரியாவைச் சேர்ந்த அந்தியோக்கியாவில் கிரேக்க பெற்றோருக்குப் பிறந்தவர். இவர் ஒரு மருத்துவர் என்றும் ஓவியர் என்றும் அழைக்கப்படுகிறார். மேலும் இவர் மணமாகாதவர். இவர் பவுலின் இரண்டாம் மூன்றாம் தூதுரைப் பயணத்தின்போது உடனிருந்தார். பவுலோடும் சீலாவோடும் மாசிதோனியாவிலுள்ள பிலிப்பில் பணியாற்றினார். எருசலேமில் பவுல் கைது செய்யப்பட்டு சிறையில் இரண்டு ஆண்டுகள் இருந்தபோது கிடைத்த நேரத்தைப் பயன்படுத்தி, நற்செய்தி நூல் மற்றும் திருத்தூதுப்பணி நூல் எழுதுவதற்குத் தேவையான சான்றுகள் தேடிப்பெற்றார். மீட்பு நெருங்கி வந்துவிட்டது மனம்மாறி நற்செய்தியை நம்புங்கள் என்று குறிப்பிட்ட லூக்கா அக்காய என்ற பகுதியில் தன் நற்செய்தியை எழுதியுள்ளார். "போயேத்தியாவில் அல்லது பித்தினியாவில் தனது 74ம் வயதில் தூய ஆவியால் நிரப்பப் பெற்றவராக இறந்தார்.

இன்றைய நற்செய்தி வாசகத்தில் ஆண்டவர் கூறுகிறார், "அறுவடைக்கு தேவையான வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள். புறப்பட்டுப் போங்கள். ஓநாய்களிடையே ஆட்டுக்குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகிறேன்." ஆண்டவர் இயேசு கூறுவதுப்போல் நாமும் நமது நற்செய்திப் பணியை எந்தத் துன்பம் வந்தாலும் சிறப்பாகச் செய்ய நல்ல ஆற்றலைத் தரும்படி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல இறைவா, உம்மால் திருப்பொழிவு செய்யப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்கள், தாம் தேர்ந்தெடுத்ததின் நோக்கத்தினைக் கருத்தில் கொண்டு மக்களை நல்வழியில் நடத்திச் செல்ல நல்ல உடல் உள்ள நலனை அளித்து, அவர்கள் செய்கின்ற பணியினை தூய ஆவியாரின் துணையோடு செயல்படுத்த அவர்களுக்கு தேவையான ஆற்றலையும், ஞானத்தையும் அளித்து பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. அன்பின் பிறப்பிடமே இறைவா, நீங்கள் செல்லும் வீட்டுக்குள் "அமைதி உண்டாகுக" என முதலில் கூறுங்கள் என்றுரைத்த இயேசுவே, எங்கள் வீட்டிலும் நாட்டிலும் அமைதி நிலவ பாடுபடும் நல்லுள்ளத்தை எங்களுக்குத் தருமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணையின் இறைவா, காய்ந்து கருகிப்போகும் வயல்வெளிகளையும், விளைச்சலையும் உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். அவைகளை ஆசீர்வதித்து மீண்டுமாய் அவைகள் செழிப்பாக வளரத் தேவையான நல்ல மழையினைத்தந்து மக்களின் மனங்களில் நிறைந்த மகிழ்வினைக் காண உம்மருளைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மைக் கெஞ்சி மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 29ம் ஞாயிறு

திருப்பலி
19.10.2025

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

I. *விப. 17: 8-13* II. *2 திமொ. 3: 14-4: 2* *லூக். 18: 1-8*

இறைவனில் மாட்சி பொருந்திய இறைச்சமூகமே, இன்றைய நற்செய்தி வாசகம் தவறு செய்பவர்கள் கடவுளுக்கும் மனிதருக்கும் பயப்படுவதில்லை என்று கூறுகிறது. இது இன்றையகால மனிதர்களின் மனநிலை. தவறு செய்வது பாவம் என்று நினைப்பதில்லை ஆனால் நிச்சயமாக ஒருநாள் பாவத்துக்கான பலனை அனுபவித்தே ஆகவேண்டும். சமுதாயத்தில் தவறு செய்துவிட்டு நிமிர்ந்த நடையோடு நம்மை ஆட்சி செய்துக்கொண்டு இருப்பவர்களால் நமக்கு நன்மை ஏற்பட்டாலும் அது பாவத்தின் விளைவாகக் கருதப்படும். இவ்வுலகில் நமக்கு பல தேவைகள் இருந்தாலும் அனைத்தையும் நம்மால் நிறைவேற்ற முடியாது. அதற்கு மிகச்சிறந்த ஆற்றல் தேவைப்படுகிறது. அத்தகைய ஆற்றலை இறைவனால் மட்டுமே நமக்கு அளிக்கமுடியும். நமது தேவையை நிறைவேற்ற பெற்றோர்கள் கடன்வாங்கியாவது நிறைவேற்ற வேண்டுமென்று நினைக்கிறார்கள். இவ்வாறு கடவுளும் நமது தேவைகளை அறிந்து நாம் கேட்கும்முன்பே நிறைவேற்றுகின்றார்.

இன்றைய நற்செய்தியில் நேர்மையற்றவரை கடவுளோடு ஒப்பிடவில்லை. ஆனால் கடவுளுக்கு எதிராக ஒப்பிடுகின்றனர். அதாவது நேர்மையற்ற நடுவரே இப்படியிருந்தால் கடவுள் எவ்வாறு இருப்பார் என்று கூறப்படுகிறது. இடைவிடாமல் மனந்தளராமல் செபிக்கவேண்டுமென்ற கருத்தின் அடிப்படையில் மனித உறவுகளில்கூட முயற்சிக்கு பலன் கிடைக்குமென்றால் இறைவனோடு நாம் கொள்ளும் உறவில் நிச்சயம் பலன் கிடைக்கும் என்பதை இயேசு வலியுறுத்துகிறார். எனவே மனந்தளராமல் இறைவனிடம் வேண்டுவோம், இடைவிடாமல் செபிக்க என்ன தடைகள் ஏற்பட்டாலும் முழு முயற்சியோடு தொடர்ந்து செபிக்கும்போது இறைவன் நமக்கு அதிகமான நன்மைகளை செய்வார். எனவே இறைவனில் நம்பிக்கைக்கொண்டோர் ஒருநாளும் இகழ்ச்சியடையார் என்பதை மனதில் நிறுத்தி இறைப்புகழ்ச்சியோடு இத்திருப்பலியில் பங்கெடுத்து பலனடைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நல்லாயனாம் இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருப்பணியாளர்களை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் மக்களை

இறைபக்தியிலும், ஞானத்திலும் வழிநடத்தவும், இறையாட்சிப் பணிபுரியும் பரந்த எண்ணத்தை இவர்களின் உள்ளத்திலும் செயலிலும் உணர்ந்து செயல்பட உம் தூய ஆவியின் வல்லமையை நிறைவாக அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் அரசரே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்களை உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் நேர்மையோடும், உண்மையோடும், நீதியோடும் பாரபட்சமின்றி, தன்னலம் கருதாமல் மக்களின் தேவைகைள மனதில் நிறுத்தி ஏற்றத்தாழ்வுகள் பாராமல் அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க பணிபுரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. கருணையின் வடிவமே எம் இறைவா, முதிர்ந்த வயதினரை உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம். குடும்ப உறவுகளாலும், யாருமற்ற நிலையில் தவிப்போரையும், தனிமையில் வாடுவோரையும் நீர் கருணைக்கண் நோக்கும். இவர்களின் தேவைகளை நிறைவேற்றவும், ஆறுதலாகவும் செயல்படும் நல்லுள்ளம் படைத்தவர்களை ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. இரக்கத்தின் தேவனே எம் இறைவா, இன்றைய இளைஞர்கள் நவீன தொழில்நுட்ப கலாசாரத்தைப் பின்பற்றி தங்களின் வாழ்வை சீரழித்துக்கொண்டிருக்கின்றார்கள். தங்களுடைய வாழ்க்கையை உமக்கேற்ற பாதையில் நாளும் நடக்க உம் தூய ஆவியாரின் துணையோடு வாழ்வின் பாதையை சீரமைத்துக்கொண்டு இறைப்பற்றுள்ள மக்களாக வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## புனித அலோசியஸ் குவனெல்லா

திருப்பலி
24.10.2025

### முன்னுரை

*சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்*

அலோசியஸ் குவனெல்லா 1842ம் ஆண்டு இத்தாலி நாட்டிலுள்ள கம்போடோல்சினோ என்ற இடத்தில் பிறந்தார். கடினமாக உழைக்கவும், ஏழைகளுக்கு உதவவும் தனது சிறுவயதில் கற்றுக் கொண்டார். சவோனா என்ற இடத்தில் குருவாகவும், ஆசிரியராகவும் பொறுப்பேற்று பணியாற்றியபோது பள்ளி ஒன்றைக் கட்டினார். இவர் கத்தோலிக்க இளைஞர் இயக்கத்தை ஆரம்பித்தப் பிறகு 1875ம் ஆண்டு புனித ஜான் போஸ்கோவைச் சந்தித்து, அவரோடு இணைந்து பணிபுரிந்தார். மூன்று வருடங்களாக இவர் சலேசியராக இருந்தபொழுது தூரினில் உள்ள புனித அலோசியஸ் ஆரட்டரியிலும், குவனெயோவில் "டிரினிட்டா" என்ற இடத்தில் நீப்ராஸ் கல்லூரியிலும் இயக்குநராகவும் பணியாற்றினார். தனது ஆயரால் மீண்டும் மறைமாவட்டத்திற்கு அழைக்கப்பெற்ற இவர், சோன்டியோவில் உள்ள டிரவோனா என்ற இடத்தில் ஏழைக் குழந்தைகளுக்காக ஒரு பள்ளியை ஆரம்பித்தார். ஆனால் அரசாங்க அதிகாரிகளின் எதிர்ப்பினால் பள்ளியை மூடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

1886ம் ஆண்டு கோமோ என்ற இடத்தில் இறைப்பராமரிப்பு இல்லத்தை (House of Divine Providence) நிறுவி திரு இருதய ஆண்டவரின் கோயிலையும் கட்டினார். இவர் இளைஞர்களுக்குக் கல்வி கற்பிக்கவும், இளம் குற்றவாளிகளையும், முதியோர்களையும் பராமரிக்கவும், இறைப்பராமரிப்பு புதல்வியர் சபையை (Dauthers of Divine Providence) நிறுவினார். இதே நோக்கத்திற்காக "அன்பின் ஊழியர்" அவையையும் (Servants of Charity) நிறுவினார். மேலும் 1913ம் ஆண்டு இறப்போருக்கு ஆறுதலாக இருக்க, புனித சூசையப்பரின் பக்த அவையையும் (Pious Union of the Passing of St. Joseph) ஏற்படுத்தினார்.

அவரது எல்லா பணிகளும், செபத்தினாலும், தாழ்ச்சியினாலும் தூண்டப்பெற்று உறுதி பெற்றன. இவர் இளகிய மனம் கொண்டவராய் இருந்தாலும் வலிமையுடனும், பரிவிரக்கம் உள்ளவராயினும் உறுதியுடனும், விவேகமுடையவராக இருந்தாலும் துணிவுடனும் இருந்தார். இவரது பணியானது அர்ப்பணம் நிறைந்ததாகவும், நிலையானதாகவும், நெஞ்சுறுதி சளைக்காத செயல்பாடுகள், தியாக உணர்வு கொண்டவராகவும் இருந்தார். இந்த நற்பண்புகள் எல்லாம் கனிவான இதயத்தாலும் இறைவனில் அசைக்க முடியாத நம்பிக்கையினாலும் பிணைக்கப்பட்டிருந்தன. இவர் 1915ம் ஆண்டு அக்டோபர் 24ம் நாள் கோமோ என்ற இடத்தில் விண்ணக வாழ்வை அடைந்தார். திருத்தந்தை ஆறாம் சின்னப்பர் 1964ம் ஆண்டு அக்டோபர் 25ம் நாள் இவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பு தந்தையே இறைவா, திருஅவையை வழி நடத்தும் எம் திருத்தந்தையை உமது அருள் வரங்களால் நிரப்பி உமக்கென அர்ப்பணிக்கப்பட்ட இவர் ஆற்றலோடு செயல்படத் தேவையான உடல் வலிமையும், மனத்திடனும், ஆரோக்கியமும் தந்து நெடுநாள் வாழும் வரமருளவும், தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மந்தையைச் சிறந்த முறையில் வழிநடத்தத் தேவையான ஆலோசனையும் ஆசீரையும் அருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. நாட்டின் பல்வேறு அமைப்புகளும், தொண்டு நிறுவனங்களும் பிறரன்புப் பணியை மையமாகக் கொண்டு சமுதாயத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காகப் பாடுபடவும், தாங்கள் எடுக்கும் முயற்சிகளும் திட்டங்களும் அனைத்து மக்களையும் குறிப்பாக ஏழை, எளியவர்களைச் சென்றடைய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. பிறரால் வெறுக்கப்பட்டவர்கள் மற்றும் வன்முறையால் நொறுக்கப்பட்டவர்கள் கிறிஸ்துவின் மீட்புப் பலனால் தங்களுக்குத் துன்பம் விளைவித்தோரை மன்னிக்கவும், மனித நேயம் நிறைந்த உலகைப் படைக்கும் எதிர்நோக்கைக் கொண்டு வாழவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 30ம் ஞாயிறு

திருப்பலி
26.10.2025

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

I. *சீராக். 35: 12-14, 16-18* II. *2திமொ. 4: 6-8, 16-18* *லூக். 18: 9-14*

இறையேசுவின் இனிய இறைகுலமே, நம் வாழ்நாளில் நம் செயல்பாடுகள் அனைத்தும் பணிவோடும், தாழ்ச்சியோடும் இருக்குமாயின், ஆண்டவரிடம் அன்பு செலுத்துவோர் அனைவரின் மத்தியிலும் உயர்ந்தவராகவும், கடவுளின் அன்புக்கு உகந்தவராகவும் இருப்போம். நாம் மன்றாடும் வேண்டுதல்களை கேட்பவராகவும், நீதிமான்களாகவும் நியாயத் தீர்ப்பை வழங்குவதாகவும் உள்ளார் என்பதை இம்முதல் வாசகம் நமக்கு அறிவிக்கிறது. இரண்டாம் வாசகத்தில் புனித பவுலடியாரின் சிந்தனை ஊற்றுகளான "என்னையே பலியாக்கினேன், விசுவாசம் கொண்டேன், நேரிய வாழ்வில் நிலைத்தேன். கிறிஸ்துவில் வெற்றிவாகைச் சூடிக்கொண்டேன். அனைத்து நாட்டவரும் என் ஆண்டவரின் செய்தியை கேட்க வேண்டுமென்று எனக்க வலுவூட்டியவரின் விண்ணரசில் என்னை சேர்த்து மீட்பளிப்பார் மாட்சி அவருக்கே என்றென்றும் உரித்தாகுக" என்றும் பதிலளிக்கிறார்.

இதுபோன்ற கருத்தினை லூக்கா நற்செய்தியாளரும் உரைக்கிறார். ஆண்டவர் கூறிய பரிசேயர், வரிதண்டுபவர் உவமைகளை முன்னிருத்தி ஒருவர் தன்னுடைய கடமைகளை சரியாக நிறைவேற்றுவதன் மூலம் தான் நேர்மையுடையவர், பாவம் செய்யாதவர் என்று தன்னைத்தானே பெருமைப்படுத்துகிறார் என்றும் இரண்டாமவர் தன்னை நொந்துக்கொண்டு ஆண்டவரை நிமிர்ந்து பார்க்க துணியாமல் "ஆண்டவரே என்மீது இறங்கியருளும்" என்று வேதனைப்படுபவருமாகிய இருவரில் தம்மை தாமே உயர்த்துவோர் தாழ்த்தப் பெறுவர், தம்மைத்தாமே தாழ்த்துவோர் உயர்த்தப் பெறுவர் என ஆண்டவர் கூறியதாக கூறுகிறார். ஆகவே, இறைவேண்டல்மூலம் நாம் இறைவனோடு இணைகிறோம். ஏழையரின் இறைவேண்டலை மட்டுமல்ல, தன்னைத் தாழ்த்தி எந்தவொரு பெருமையையும் எண்ணிராமல் தன்னை முழுவதும் இறைவனில் ஒப்புவித்து இறைவனின் மாட்சியை உயர்த்தி அவரை ஆராதிக்கம் எவருக்குமே ஆண்டவரில் இணையும் வாழ்வு பெறுவோம் என்ற நினைவோடு இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல இறைவா, திருத்தந்தை 14ம் லியோ கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் அனைத்து திருநிலையினரையும் உம் பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் ஒவ்வொருவரும் தன்னுடைய வாழ்க்கையின் மேன்மையையும், சேவையின் மகத்துவத்தையும் உணர்ந்தவர்களாய் தம்மைத் தாழ்த்தி மக்களுக்காக இறைதிட்டத்தை முழுமையாக நிறைவேற்ற இவர்களுக்கு

உமது தூய ஆவியாரின் தூண்டுதலை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. வல்லமையின் இறையரசே, "அறுவடையோ மிகுதி, வேலையாட்களோ குறைவு" என்ற திருமறையின் திருவாசகத்தை மனதில் இருத்தி குருத்துவ பணியின் அவசியத்தை உணர்ந்து இன்றைய பணியின் அவசியத்தை உணர்ந்து, பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளை இறைப்பணியாற்ற, தாராள உள்ளத்தோடு இறைவனுக்கு ஒப்புக்கொடுக்கும் மனதைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. எளிமையின் நாயகனே இறைவா, நாட்டையாளும் தலைவர்கள், உலக ஆடம்பரங்களை பெரிதாக எண்ணாமல் எல்லோருக்கும் உதவும் எண்ணம் வளரவும், தன்னலம் கருதாது எளிமையை விரும்பி சேவை புரியும் நல்லுள்ளம் கொண்ட தலைவர்களை எம் தேசத்திற்கு அளித்து மக்களின் தேவைகளை கண்ணும் கருத்துமாக நின்று செயல்படுத்தி மக்களை மகிழ்விக்க வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
4. உண்மையின் உறைவிடமே எம் இறைவா, இக்காலச் சூழலில் இயேசுகிறிஸ்துவே நிலையான தேவன் என்பதை உணர்த்தும் வண்ணமாய் உமத நீதியின் நிழலில் கிறிஸ்தவர்கள் மீது நடைபெறும் பல வன்முறைகளை தட்டுக்கேட்டும் விதமாய் உமது மகத்துவத்தை வெளிப்படுத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.



# திருத்தூதர்கள் சிமியோன், யூதா

திருப்பலி
28.10.2025

## முன்னுரை

*திரு. செபாஸ்டின்*

ஆண்டவரில் அன்புள்ள சகோதர சகோதரிகளே, இன்று திருத்தூதர் புனித சீமோன், மற்றும் யூதா ததேயு இவர்களின் திருவிழாவினை திருஅவை கொண்டாடுகிறது. புனித சீமோன், கானா என்ற இடத்தைச் சார்ந்தவர். இயேசு தண்ணீரை திராட்சை இரசமாக மாற்றிய ஊர். தீவிரவாதியாகிய சீமோன் என்று குறிப்பிடப்படுகிறார். தீவிரவாதத்தால் உரோமையரிடமிருந்து ஆட்சியைப் பறிக்க ஆசைப்பட்ட அக்குழுவைச் சார்ந்தவர். தனது எதிர்ப்பார்ப்புக்கு ஏற்ப இயேசுவை தனது பக்கம் இழுக்க ஆசைப்பட்டார். இறுதியில் இயேசுவின் எதிர்ப்பார்ப்புக்கு ஏற்ப இவர் மாறினார். எகிப்து, கிரேன், பாலஸ்தீன், பெர்சியா பகுதிகளில் நற்செய்தி அறிவித்து வந்தார். இவர் மரம் அறுக்கும் ரம்பத்தால் அறுக்கப்பட்டு இறந்ததாக பாரம்பரியம் கூறுகிறது.

புனித யூதா ததேயு: இவர் சின்ன யாக்கோப்பின் சகோதரர், இயேசுவின் உறவினர். அதிகம் கண்டு கொள்ளப்படாமல் இருந்தவர். "ஆண்டவரே நீர் உம்மை உலகிற்கு வெளிப்படுத்தாமல் எங்களுக்கு வெளிப்படுத்தப்போவதாகச் சொல்கிறீரே ஏன்?" என்று கேட்டவர் (யோவான் 14:22). இவர் பரந்த மனப்பான்மையும், பிறரன்பும் நிறைந்து விளங்கியவர். இவர் மெசபட்டோமியா, அர்மேனியா, பெர்சியா பகுதிகளில் நற்செய்தி அறிவித்து வந்தார். மறைசாட்சியாக தன் உயிரை ஈந்தார். இவரை கைவிடப்பட்டவர்களின்

பாதுகாவலர் என்று திருஅவை அழைக்கிறது. இந்த இரு திருத்தூதர்களிடம் விளங்கிய இறையாட்சியின் உத்வேகம், பரந்த மனப்பான்மை, பிறரன்பு நிறைந்த உள்ளம் இவற்றை நமதாக்கிக் கொள்ள அருள்வேண்டி, இப்பலியை வானவர்களோடும், புனிதர்களோடும் சேர்ந்து உருக்கமாக ஒப்புக்கொடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பே உருவான இறைவா, எம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் சீடத்துவத்தின் மேன்மையை உணர்ந்து உற்சாகமாக பணிசெய்திட தூய ஆவியாரை இவர்கள்மீது பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. ஒற்றுமையின் தலைவரே இறைவா, எம் நாட்டையாளும் தலைவர்களும், ஆட்சியாளர்களும் உமது விருப்பத்தை அறிந்து இறைமாண்புடன் தூய்மையோடும், நேர்மையோடும் மதவெறி, மொழிவெறியின்றி அனைவரும் ஒரே இனத்தவர் என்ற மனிதநேயத்துடன் நல்லாட்சிப் புரிந்திட உம்மை மன்றாடுகிறோம்.
3. வாழ்வளிக்கும் வள்ளலே, எம் பங்கில் உள்ள அனைத்து குடும்பங்களும், பிறரன்பிலும், பரந்த மனப்பான்மையிலும் சிறந்து விளங்கவும், பல்வேறு துன்பங்கள், துயரங்கள், ஏழ்மை, வறுமை, முதுமை, தனிமை, சிறைவாசம் என்று பல நிலைகளில் வாடுவோர் வாழ்வில், நிறைவாழ்வும் மன அமைதியும் பெற்றவர்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# அருளாளர் தொன் மைக்கேல் ரூவா

திருப்பலி
29.10.2025

## முன்னுரை

*சலேசிய புனிதர்களின் திருப்பலி புத்தகம்*

அருளாளர் தொன் மைக்கேல் ரூவா 1837ம் ஆண்டு ஜூன் 9ம் நாள் தூரின் நகரில் பிறந்தார். 1852ம் ஆண்டு வல்தோக்கோவில் இருந்த தொன் போஸ்கோ நடத்திய ஆரட்டரியில் சேர்ந்தார். இரண்டு வருடம் கழித்து தொன் போஸ்கோ சலேசிய சபையை எவ்வாறு உருவாக்குவது என்று முதலில் இவரிடம் கலந்து ஆலோசித்தார். இவர் 1855ம் ஆண்டு மார்ச் 25ம் நாள் சலேசிய சபையில் சேர்ந்து, 1860ம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப் பெற்றார். அதன்பின் தொன் போஸ்கோவிற்கு உறுதுணையாக இருந்து 1865ம் ஆண்டு அவருக்கு உதவியாளராக பொறுப்பேற்றார். தனது பணியைச் சிறப்பாகச் செய்ததாலும், 1884ம் ஆண்டு திருத்தந்தை 13ம் சிங்கராயர் இவரை தொன் போஸ்கோவிற்கு அடுத்ததாக சலேசிய சபைத் தலைவராக நியமிக்கலாம் என்று பரிந்து பேசியதாலும் 1888ம் ஆண்டு அவைத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இவர் சட்டங்களைச் சரியாக கடைப்பிடித்ததால் "வாழும் அறநெறி" (The Living Rule) என்றும், தந்தைக்குரிய பண்புகளோடு பிறரிடம் பழகியதால்

"இரக்கத்தின் தலைவர்" (Sovereign of Kindness) என்றும் இவரை அழைத்தனர். தனது அறிவுக் கூர்மையாலும், தொலைநோக்குப் பார்வையாலும் மாணவர்களுக்கு உடற்பயிற்சி, தொழிற்பயிற்சி, வணிகப் பயிற்சி ஆகியவற்றிற்கான பள்ளிகளை ஆரம்பித்து அவர்கள் தங்குவதற்கு இல்லங்களைக் கட்டினார். சலேசியர்களின் எண்ணிக்கை அதிகமானவுடன் உலகெங்கும் சலேசியர்களை அனுப்பி திருத்தூதுப்பணியைச் செய்ய ஊக்குவித்தார். இவரே 1906ம் ஆண்டு சலேசியர்களை இந்திய நாட்டிற்கு அனுப்பி வைத்தார்.

இவர் 1910ம் ஆண்டு ஏப்ரல் 6ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். 1972ம் ஆண்டு அக்டோபர் 29ம் நாள் திருத்தந்தை ஆறாம் சின்னப்பரால் இவருக்கு அருளாளர் பட்டம் கொடுக்கப்பட்டது. அப்போது திருத்தந்தை தொன் ரூவாவைப் பற்றி குறிப்பிடும்பொழுது "சலேசிய குடும்பமானது புனித தொன் போஸ்கோவில் தொடக்கமும், தொன் ரூவாவில் தொடர்ச்சியையும் கொண்டுள்ளது. இவர் தனது படிப்பினை புனித தொன் போஸ்கோவிடமிருந்து கற்றுக்கொண்டார். சட்ட நுணுக்கங்களை அவருடைய சட்டத்திட்டத்திலிருந்து தெரிந்துக் கொண்டார். அவரின் புனிதத் தன்மையைத் தானும் பின்பற்றினார். இவர் உண்மையான பாரம்பரியத்தை நிர்ணயித்தார்," என்று புகழாரம் சூட்டப்பட்டார். இப்புனிதரின் வாழ்வை முன்மாதிரியாகக் கொண்டு இவரின் துணையோடு நாமும் வாழ்வில் சிறந்தவர்களாக, இயேசுவின் உண்மையான மக்களாக வாழ இத்திருப்பலியில் பக்தியோடு பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நானே நல்லாயன் என்றவரே, உம் மந்தையை வழிநடத்தி பாதுகாக்கும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரும் உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டு மந்தையைப் பாதுகாக்க அனுப்பப்பட்டவர்கள் என்பதை உணர்ந்தவர்களாய், உம் வழியைப் பின்பற்றி வாழவும், மந்தையை நல்வழியில் நடத்திடவும் வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
2. இன்றைய நவீன உலகிலே, மக்கள் கடவுளை ஏற்க மறுத்தல், நுகர்வு கலாச்சாரத்தில் மூழ்குதல், சிற்றின்பங்களைத் தேடுதல் போன்ற சோதனைகளுக்கு இடம் தராமல் நற்செய்தியின் மதிப்பீடுகளின் அடிப்படையில் தங்களது அன்றாட வாழ்வினை உம்மிடம் சமர்த்து நீரே எங்களை பாதுகாப்பவர் வழிநடத்துபவர் என்ற உண்மையான நம்பிக்கையோடு பற்றுதலோடு உம்வழியில் எங்களை சமர்ப்பித்து வாழும் வரம்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.
3. இளையோர் தங்களுடைய ஆசிரியர்களின் நல்வழி காட்டுதலால் உமக்கும் அயலாருக்கும் ஏற்ற விதத்தில் ஞானத்திலும், அருளிலும், பக்தியிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கவும், இறையரசின் வருகைக்காக காத்திருக்கும் நாங்கள் காலத்தின் அறிகுறிகளை அறிந்து, சந்திக்கும் ஒவ்வொரு மனிதரிலும் உம்மையே காணவும், செயல்படவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி-2

# நம்பிக்கையில் வளர...



ஏழ்மையாய் வாழ்ந்த செல்வந்தர்

# அசிசி நகர் புனித பிரான்சிஸ்

*திரு. டே. ஆக்னல் ஜோஸ்*

அன்பார்ந்தவர்களே, கத்தோலிக்கத் திருஅவை அக்டோபர் 4ம் தேதி அசிசி நகர் புனித பிரான்சிஸின் விழாவைச் சிறப்பிக்கின்றது. செல்வம் மிகுந்த குடும்பத்தில் பிறந்து, ஆடம்பரமாக வாழ்ந்து, இயேசுவைப் பின்பற்றுவதற்காகத் தம்மையே வெறுமையாக்கியதால் ஒரு புனிதராக மாறியவர் பிரான்சிஸ். தமது ஏழ்மைக்கும் எளிமைக்கும் அடையாளமாகவே, "பிரான்சிஸ்" என்ற இவரது பெயரைத் தற்போதைய திருத்தந்தை தமக்குத் தேர்ந்தெடுத்துள்ளார். இத்தாலி நாட்டின் அசிசி நகரைச் சேர்ந்த துணி வணிகர் பியெத்ரோ பெர்னார்தோனே-பிக்கா பூர்லிமோந்த் ஆகியோரின் மகனாக, 1182ம் ஆண்டு இவர் பிறந்தார். திருமுழுக்கு யோவானை மனதில் கொண்டு இவருக்கு, "ஜியோவான்னி" என்ற பெயரை திருமுழுக்கின்போது இவரது தாய் சூட்டினார். அவ்வேளையில் பிரான்சிலிருந்த தந்தைக்கு இந்தப் பெயர் பிடிக்காததால், "பிரெஞ்சுக்காரர்" என்று பொருள்படும் "பிரான்செஸ்கோ" என்று அழைத்தார். இதிலிருந்தே நாம் அழைக்கின்ற "பிரான்சிஸ்" என்ற ஆங்கிலப் பெயர் தோன்றியது. செல்வந்தரின் மகனாக வளர்ந்த பிரான்சிஸ், தமது மனம் விரும்பியபடியே அனைத்தும் செய்தார். தலைமைத்துவப் பண்பும் ஆடம்பரத்தில் ஆர்வமும் கொண்டவராகத் திகழ்ந்தார். நண்பர்களோடு இணைந்து இரவு நேர கேளிக்கை விருந்துகளில் நேரத்தைச் செலவிடுவதைப் பொழுதுபோக்காகக்

கொண்டிருந்தார். அனைவரும் இவரை அன்பு செய்தார்கள். இவர் எதைச் செய்தாலும் யாரும் கேள்வியே கேட்டதில்லை. இவரது வார்த்தைகளிலே சொல்ல வேண்டும் என்றால், அந்நாட்களில் இவர் பாவத்தில் வாழ்ந்தார்.

பிரான்சிஸை தம்மைப் போன்றே செல்வாக்குள்ள துணி வணிகராக உருவாக்கி விட வேண்டும் என்று இவரது தந்தை விரும்பினார். தந்தையின் விருப்பத்தின்படி இவர் ஒரு சிறந்த வணிகராக உருவெடுத்தார். ஆனால், ஒரு சிறந்த தலைவராக, படைத் தளபதியாக மாற வேண்டும் என்பது இவரது கனவாக இருந்தது. போரின் வழியாகவே எப்போதும் நிலைக்கின்ற மாண்பும் மரியாதையும் கிடைக்கும் என்று இவர் நம்பினார். 1201ல் பெருஜியாவுக்கு எதிரானப் போரில் பங்கேற்ற இவர், கைதாகி சிறையில் அடைக்கப்பட்டார். அங்கிருந்த வேளையில்தான் இவருக்கு வாழ்வின் தேடலைக் குறித்த ஒரு புதியப் புரிதல் உருவானது. ஓராண்டு காலத்துக்குப் பிறகு விடுதலை அடைந்த இவர், மீண்டும் துணி வணிகத்தைத் தொடங்கினார். ஆனால், ஏழைகள்மீது அதிக இரக்கம் கொண்டவராய் மாறினார். ஒருமுறை தம்மிடம் பிச்சை கேட்ட ஒருவருக்கு, ஒருநாள் விற்பனையில் கிடைத்த பணம் முழுவதையுமே இவர் கொடுத்து விட்டார். நண்பர்கள் இவரைப் பாராட்டினாலும், தந்தையிடம் இருந்து வசை மொழியே கிடைத்தது. பின்னர் கொடிய நோயால் பாதிக்கப்பட்ட இவர், கடவுளுக்காக ஏதேனும் செய்ய வேண்டும் என்ற உணர்வைப் பெற்றார். 1205ல் 4ஆம் சிலுவைப் போரில் பங்கேற்கப் புறப்பட்டுச் சென்ற இவர், வழியில் ஏற்பட்ட உள்ளுணர்வால் வீடு திரும்பினார்.

அதன் பிறகு நண்பர்களைத் தவிர்த்த இவர், அதிக நேரத்தை செபத்தில் செலவிடத் தொடங்கினார். ஒரு குகைக்குச் சென்று, ஆடம்பர நாட்டத்தால் தாம் செய்த செயல்களுக்காக மனம் வருந்தி அழுதார். நண்பர்கள் இவரிடம், "உனக்கு எந்தப் பெண்ணையாவது திருமணம் செய்து கொள்ளும் ஆசை வந்துவிட்டதா?" என்று கேட்டனர். இவரோ, "ஆம். நீங்கள் யாரும் விரும்பாத, எதிர்பார்க்காத ஒரு பெண்ணை - ஏழ்மையை - திருமணம் செய்து கொள்ளப் போகிறேன்" என்று பதிலளித்தார். ஒருமுறை நாட்டுப்புறப் பகுதி ஒன்றில் குதிரையில் சென்று கொண்டிருந்த பிரான்சிஸ், தொழுநோயாளர் ஒருவரைக் கண்டார். தமது மனவுறுதிக்கு கடவுள் கொடுத்த சோதனையாகக் கருதிய இவர், குதிரை மீதிருந்து கீழிறங்கி அந்த தொழுநோயாளரை அரவணைத்து அவரது கையை முத்தமிட்டார். தமது மனமாற்றத்துக்காக சான் தமியானோ ஆலயத்திற்கு சென்ற இவர், அங்கிருந்த சிலுவையிலிருந்து ஆண்டவரின் குரலைக் கேட்டார். "பிரான்சிஸ், எனது ஆலயத்தின் பழுதை நீக்கு" என்ற கட்டளை இவருக்கு வழங்கப்பட்டது.

முதலில் சான் தமியானோ ஆலயத்தைப் பழுதுபார்க்க கட்டளை வந்ததாக நினைத்த பிரான்சிஸ், துணி விற்பனையில் கிடைத்த பணத்தை அதற்காக கொடுத்தார். இந்தச் செயலை திருட்டாகக் கருதிய இவரது தந்தை, இவரை ஆயர் முன்னிலையில் நிறுத்தி தமது பணத்தைத் திரும்பத் தருமாறு கேட்டார். அந்தப் பணம் அவருக்கு கிடைத்தது, ஆனால் தமது மகனை அவர் இழந்தார். பிரான்சிஸ் தம் உடைகளையும் களைந்து தந்தையிடம் ஒப்படைத்து விட்டு,

"என் தந்தை விண்ணகத்தில் இருக்கிறார்" என்று கூறி 1207ல் துறவறத்தை ஏற்றார். பிறகு, வெறுங்கால்களோடு பல இடங்களுக்கு நடந்துச் சென்று மக்கள் எளிமையாக வாழ அழைப்பு விடுத்தார். பிரான்சிஸின் எளிமையால் கவரப்பட்ட பலர், இவரது சீடர்களாக மாறினர். நற்செய்தியின் போதனைகளை ஏற்று, கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் பயணிக்க முடிவு செய்த இவரும் தோழர்களும் பிச்சையெடுத்து வாழ்ந்தனர். எளிய குடில்களை உறைவிடமாகக் கொண்டு, ஏழைகளுக்கும் நோயாளர்களுக்கும் உதவி செய்தனர். இவர்களது சபையின் செயல்பாட்டை ஏற்க முதலில் மறுத்த திருத்தந்தை, பின்னர் அனுமதி வழங்கினார்.

ஒருவரையொருவர் அன்பு செய்தும் மதித்தும் வாழ வேண்டுமென்று பிரான்சிஸ் போதித்தார். இயற்கையில் உள்ள கதிரவன், நிலவு, பறவைகள், விலங்குகள், தாவரங்கள் என ஒவ்வொன்றையும் தமது சகோதர சகோதரிகளாக எண்ணி உறவாடினர். பிரான்சிசும் அவரது தோழர்களும், இருவர் இருவராகச் சென்று மக்களுக்கு நற்செய்தி அறிவித்தனர். காலணி கூட அணியாமல் மிகவும் எளிமையாக வாழ்ந்த அவர்கள், தங்களை விடவும் வறியோராய் வாழ்ந்தவர்களுக்கு உணவும் உடையும் கொடுக்கத் தவறியதில்லை. 5ஆம் சிலுவைப் போர் நடைபெற்ற காலத்தில், எகிப்திய சுல்தான் அல் கமீலை சந்தித்து அமைதி ஏற்படுத்த பிரான்சிஸ் முயன்றார். கிறிஸ்தவ கைதிகளைத் துன்புறுத்தக் கூடாது என்ற வாக்குறுதியையும் அவரிடமிருந்து பெற்றார். மேலும் பாலஸ்தீன் நாட்டுக்குச் சென்ற இவர், அங்கு துறவற இல்லம் ஒன்றை அமைக்க முடிவெடுத்தார். பத்து ஆண்டுகளில், "சிறிய சகோதரர்கள்" என்ற இவரது சபை உறுப்பினர்களின் எண்ணிக்கை ஐந்தாயிரமாக உயர்ந்தது. இவர் தமது சபையின் தலைமைப் பதவியை வேறொருவரிடம் ஒப்படைத்தார்.

1223ல் கிராச்சியோ பகுதி குகையில், குடில் அமைத்து கிறிஸ்துமஸ் கொண்டாடும் வழக்கத்தை உருவாக்கினார். சிலுவைப்பாதை பக்தி முயற்சியையும் இவரே தோற்றுவித்தார். 1224 செப்டம்பர் 14ந்தேதி, இயேசுவின் ஐந்து காயங்களையும் இவர் தமது உடலில் பெற்றார். "அமைதியின் கருவியாய் என்னை மாற்றிடும் இறைவா" என்பதே இவர் மனதில் எப்போதும் எழுந்த செபமாக இருந்தது. இயற்கையோடு இணைந்து, ஏழையாக வாழ்ந்து, நற்செய்தியை அறிவித்த இவர் 1226 அக்டோபர் 4ந்தேதி இறந்தார். அமைதியின் கருவியாக வாழ்ந்த அசிசி நகர் புனித பிரான்சிஸின் வாழ்வில் இருந்து நாம் மூன்று முத்தான பாடங்களைக் கற்றுக்கொள்ளலாம். முதலாவது, செல்வந்தராய் பிறந்தாலும் தமது அழைப்பை உணர கடவுள் நமக்கு வாய்ப்பு வழங்குகிறார். இரண்டாவது, கடவுள் தரும் வாய்ப்பைப் பயன்படுத்தும் எவரும் புனிதராக மாற முடியும். மூன்றாவது, இயற்கையோடும் மனிதரோடும் நல்லுறவைப் பேணும்போது, நாமும் அமைதியின் கருவிகளாகத் திகழ முடியும். புனித பிரான்சிஸைப் பின்பற்றி, நாமும் கிறிஸ்துவின் சீடர்கள் என்பதை, நமது எளிய வாழ்வால் இந்த உலகிற்கு எடுத்துக்காட்ட முயற்சிப்போம்.

* * *



அக்டோபர் மாத

# புனித தெரேசாக்கள்

*திரு. புல்லோன் ஜோ லூயிஸ்*

புனிதர்கள்... அன்பு, பணிவு, துறவு, தியாகம், இறைப்பற்று, மக்கள் நலம் போன்றவற்றிற்காகத் தங்களின் வாழ்வை அர்ப்பணித்து, சகோதர வாழ்வு வாழ்ந்தார்கள். நம்மில் ஒருவராகப் பிறந்தவர்கள் நம்மைப் பார்த்து "எங்களைப்போல் இருங்கள்" என்று கூறும் தகுதியைப் பெற்றவர்கள். அத்தகுதியைப்பெற்ற தேவனின் திருஅவை மலர்களில் சிறுமலர் குழந்தை தெரேசாவும், அவிலா தெரேசாவும் தங்களின் புனிதப் பாதையில் மனம் பரப்பியவர்கள், அக்டோபர் மாதத்தின் வசந்தங்கள்.

இருவரின் பிறந்த நாடு, வாழ்ந்த காலங்கள், இறைவனடி சேர்ந்த வயதும் வேறு வேறு. ஆனால் இருவரும் இணைந்த துறவற சபை கார்மேல் சபை. இவர்கள் செப, தவ வாழ்வில் சிறந்தவர்கள் என்றாலும், சிறுமலர் குழந்தை தெரேசாவின் வாழ்வோ சற்றே வித்தியாசமானது. அவரின் வாழ்வு வெளியுலக வாழ்வு, மாற்றத்தின் வாழ்வு. தான் சேர்ந்த கார்மேல் சபையில் பல நடைமுறைக் குறைகளைக் கண்டு, புதிய நெறிமுறைகளைக் கொண்ட ஓர் கார்மேல் சபையை உருவாக்கினார். இருவருமே பெண்குல மறைவல்லுநர்களாக அறிவிக்கப்பட்டவர்கள்.

சிறுமலர் குழந்தை தெரேசா, பெண் குலத்தின் மூன்றாம் மறைவல்லுனராகவும், அவிலா தெரேசா, பெண் குலத்தின் முதல்

மறைவல்லுநராகவும் அறிவிக்கப்பட்டார்கள். இருவரும் புத்தகங்கள் படிப்பதில் ஆர்வமாயிருந்ததுபோல், புத்தகங்கள் எழுதுவதில் திறமைமிக்கவர்களாக இருந்தார்கள். சிறுமலர் குழந்தை தெரேசா, தான் உடல்நலம் சரியில்லாது படுக்கையில் இருந்தபோது, தலைமைச் சகோதரியின் வேண்டுகோளின்படி தமது சுயசரிதையை "ஓர் ஆன்மாவின் வரலாறு" என்ற புத்தகமாக எழுதினார். அதேபோல் அவிலா தெரேசா, அவரின் ஆன்மீக வாழ்வை நாம் கண்டுணரும்படியாய், "நிறை வாழ்வின் வழி" மற்றும் "ஆன்மாவின் கோட்டை" என்ற இரண்டு புத்தகங்களை எழுதினார். இருவருமே, நமக்குப் பாதுகாவலர்களாக நியமிக்கப்பட்டார்கள். சிறுமலர் குழந்தை தெரேசா "வேத போதக நாடுகளின் பாதுகாவலர் என்றும் அவிலா தெரேசா அருள்வேண்டுவோருக்குப் பாதுகாவலர் என்றும் அறிவிக்கப்பட்டார்கள். இருவரின் வாழ்வும் நமக்கு இருவேறு சுவைகளைத் தந்தாலும், நம்மை ஒரே பாதையில் அழைத்துச் செல்கின்றன. அந்தப் பாதையில் முதலில் குழந்தை தெரேசாவைப் பார்ப்போம்.

குழந்தை தெரேசா... லூயி, செலி என்பவர்களுக்கு, பிரான்ஸ் நாட்டில் அலென்கன் என்ற இடத்தில் 1873 ஜனவரி இரண்டாம் நாள் பிறந்தார். சிறு வயது முதலே செபத்தில் ஆர்வமுள்ளவராயிருந்தார். ஒருநாள் கோவிலில் செபித்துக் கொண்டிருக்கையில், செபப் புத்தகத்திலிருந்து ஒரு படம் கீழே விழுந்தது. சிலுவையில் தொங்கிய இயேசு அந்தப் படத்தில் சித்தரிக்கப்பட்டிருந்தார். இயேசுவின் இரத்தம் பலருக்கு வீணாய் போகிறது என்று அன்றிலிருந்து ஏங்கி வாடினர். பிரான்சினி என்ற ஒரு கொலைகாரனை, மனந்திருந்த மறுத்த தூக்குக் கைதியை தனது உணவு, உறக்கம், வேலை, விளையாட்டுக்கள் அனைத்தையும் செபமாக மாற்றி அவனுடைய இறுதி நேரத்தில் மனந்திருந்தச் செய்தார்.

செபம் அது ஒரு மலர். அதனால்தான் புனித மரியாளின் மன்றாட்டு மாலையில், "மறைபொருளைக் கொண்ட ரோஜா மலரே" எங்களுக்காக வேண்டிக்கொள்ளும் என்று செபிக்கின்றோம். அன்னை மரியாள் நமது செபங்களை ஏற்றுக்கொண்டவராக, இறைமகனிடம் பரிந்து பேசி பெற்றுத்தருவதோடு புதுமைகள் பல புரிந்து மணம் பரப்பி வருகிறார். குழந்தை தெரேசாவும் தான் வாழ்ந்த அந்த நான்கு சுவற்றிற்கு இடையில், செபத்தில் கழித்து, அன்னை மரியின் பாதத்தில் அந்த செபங்களையெல்லாம் மலராகச் சாற்றி, மணம் பரப்பி, மரியாள் மூலமாக புதுமைகள் பல புரிந்து மணம் பரப்பினார். மணம் பரப்பி வருகிறார். இதன் பிரதிபலிப்புத்தான் அவள் மரணப் படுக்கையில் இருக்கும்போது, "நான் இறந்தப்பின் ரோசா மலராகப் பொழிவேன், மோட்சத்தில் இருந்துக்கொண்டு உலகுக்கு நன்மை செய்வேன்" என்று சொன்னபடி புதுமைகள் செய்து வருகிறார்.

1877ல் இவள் தாய் இறந்தப்பின் லிசியி நகருக்கு இவரது குடும்பம் நகர்ந்தது. இவருடைய 9 வயது முதல் தமது மூத்த சகோதரிகளைப்போல் கார்மேல் மடத்தில் சேர்ந்து இறைவனுக்கு ஊழியம் புரிய வேண்டும் என்ற குறிக்கோளோடு இருந்தார். ஆனால் இவரின் வயதைக்காட்டி தகுதியில்லை

என்று கூறியதோடு, ஆயரிடமிருந்து வயது சலுகைக்கான சலுகைப் பெறவும் அறிவுறுத்தினார் மடத்து குரு. இதற்காகத் தன் தந்தையை உரோமைக்கு அழைத்துச் சென்று திருத்தந்தை 13ம் சிங்கராயரைச் சந்தித்து அவருக்கு 15வயது முடிந்ததும் கார்மேல் மடத்தில் சேர்த்துக்கொள்ள அனுமதி பெற்றார்.

பாவிகளைக் காப்பாற்றவும், குருக்களுக்காக செபிக்கவுமே நான் கார்மேல் சபையில் சேரப்போகிறேன். இயேசுவை நேசிப்பேன், ஆன்மாக்களைக் காப்பாற்றுவதும், இவ்விதம் மக்களை நேசிக்கச் செய்வதுமே பூமியில் எனது ஒரே வேலை. இயேசுவை மனம் நோகச் செய்வதில் அவரது இதயத்தைப் புண்படுத்துவதும், நாம் அவர்மீது நம்பிக்கையின்றி இருப்பதே" என தெரேசா கார்மேல் சபையில் சேருவதற்கு முன் கூறி தனது செப, தவத்தைப்பற்றி உலகுக்கு வெளிப்படுத்தினார். இவர் உலகத்தைத் துறந்து கார்மேல் சபையில் சேர்ந்த நாள் முதல் அருள் வழியில் வளர்ந்தார். துறவற வாழ்வில் ஒன்பது ஆண்டுகளே இறைப்பணி என்றாலும், அந்த 9ஆண்டுகளும் ஆண்டவருக்காகச் சொல்லற்கரிய சிலுவைகளை மிகுந்தப் பொறுமையோடும், மகிழ்வோடும், மனவலிமையோடும் சுமந்து வந்தார். கார்மேல் மடத்தில் சிலுவைகள் நிறைந்த இவரது வாழ்வு ஒரு வேதசாட்சியின் ஒப்பாக இருந்தது. 1887 செப்டம்பர் 30ல் எலும்புருக்கி நோயில் துன்புற்று இறைவனில் நித்திரையானார். திருத்தந்தை 11ம் பயஸ் 1925ம் ஆண்டு இவரை புனிதையாக அறிவித்தார். இவர் நான்கு சுவருக்குள் இருந்துக்கொண்டு செப தபங்களில் ஈடுபட்டு புனித வாழ்வு வாழ்ந்து புனிதையானவர். 1927ல் வேதபோதக நாடுகளின் பாதுகாவலியாக அறிவிக்கப்பட்டார்.

இவர் வாழ்ந்த காலத்திற்கு முன்பே வாழ்ந்தவர்தான் புனித அவிலா தெரேசம்மாள். ஸ்பெயின் நாடு அவிலா என்ற இடத்தின் மண்வாசனைதான் அவிலா தெரேசா. தோன் அலன்சோ சான்செஸ் தெ செபதேவிற்கும் டொன பியட்ரிஸ் என்பவருக்கும் மூன்றாம் மகளாக 1515, மார்ச், 28ல் பிறந்தார். 7 வயதிலேயே புனிதர்களின் வரலாறு அவரை மிகவும் கவர்ந்தது. வேதத்திற்காகக் குருதி சிந்தியவர்கள் மிக எளிதில் விண்ணகத்தைக் கைப்பற்றிக் கொண்டார்கள் என்பதால் இவரும் அந்த ஆசையில் மூர் ஜாதியினரிடையே சென்று மறைப்பரப்புப் பணி செய்து மறைசாட்சியாக முடிவெடுத்தார். ஆனால் அங்குச் செல்ல அனுமதிக்கப்படவில்லை. தாயின் இறப்பிற்குப்பின் 15வது வயதில் இவரது தந்தை இவரை அகஸ்டினியன் மடத்தில் சேர்த்தார். இவர் நோய்வாய்ப்பட்டு, வீட்டிற்குத் திரும்பினார். இரண்டாம் முறையாய் மடத்தில் சேர்ந்தபோதும் இதே நிலை. இந்த காலக்கட்டத்தில் அவரின் உறவினர் ஒருவர் கொடுத்த செப நூல் ஒன்றை நன்கு பயன்படுத்தியவராய் 3 ஆண்டுகளுக்குப் பிறகு நலம் பெற்றார். இந்த நிலையில் தந்தையிடம் அனுமதி கிடைக்காதபோதும், யாருக்கும் தெரியாமல் 1535 நவம்பர் மாதத்தில் அவிலாவில் இருந்த கார்மேல் மடத்தில் சேர்ந்தார். சில நாட்களுக்குப் பிறகு தந்தையின் அனுமதி கிடைத்தது. அடுத்த வருடமே துறவற வார்த்தைப்பாடு கொடுத்து இயேசுவின் தெரேசா என்று பெயர் பெற்றார். சிறிது நாட்களிலேயே கடும் நோயால் அவதியுற்றார். புனித யோசேப்பிடம் மன்றாடினார்.


தொடர் மருத்துவத்திற்குப் பிறகு ஓரளவு நலம் பெற்று, செப வழியைத் தேடினார், செபிக்க ஆரம்பித்தார். உடல்நோயும், மனவேதனையும் இவரை வாட்டின. இவரின் துறவற வாழ்வு நீண்டகாலம் இருந்தபோதும் இவரிடம் சில குற்றங்குறைகள் இருந்தன. கடவுளின் அருளுடன் குற்றங்களை அகற்றி புண்ணிய வாழ்வில் முன்னேறத் தொடங்கினார். தூய ஆவியாரால் ஏவப்பட்டு புனித அல்காந்தரா இராயப்பர் போன்ற நல்ல மனிதர்களின் ஆலோசனையுடன் தன் சபையின் சீர்த்திருத்தும் பெரிய வேலையைத் தொடங்கினார். அவிலாவில் தனக்குத் தானமாகக் கிடைத்த ஒரு இடத்தில் 1561ல் புதிய சூழலில் மடம் ஒன்று கட்டினார். அந்தப் புதிய மடத்திற்கு புனித வளனாரைப் பாதுகாவலராகத் தெரிந்துக் கொண்டார். நீடித்த மௌனம், கடுமையான எளிமைத் தனம், காலணிகள் அணியாமை, புலால் உணவை முற்றிலும் தவிர்த்தல் என புதிய ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்கத் தான் ஏற்படுத்திய புதிய துறவற மடத்தினருக்கு அறிவுறுத்தினார். இவைகளைத் தாண்டி புனித சிலுவை அருளப்பர் உதவியுடன் புண்ணிய வழியாக குறிப்பிட்ட ஐந்து காரியங்களை கவனிக்க வேண்டும் என்றார். இவருக்கு 65 வயது நடக்கும்போது அவரது சபையில் 17 மடங்கள் காட்சியளித்தன.

"அன்பு மட்டுமே அனைத்திற்கும் ஈடாகிறது" என்று மொழிந்த தெரேசா, 1582 அக்டோபர் 4ம் நாள் தன் இன்னுயிரை நீத்து இறைவனடி சேர்ந்தார். திருத்தந்தை 5ம் பவுல் 1614 ஏப்ரல் 24ல் அருளாளர் பட்டமும், திருத்தந்தை 15ம் கிரகோரியார் 1622 மார்ச் 12ல் புனிதர் பட்டமும் வழங்கினார். திருத்தந்தை 6ம் பவுல் இவருக்கு திருஅவையில் பெண்குலத்தின் முதல் மறைவல்லுநர் என்ற பெருமையை அளித்தார். திருஅவையின் வசந்தகால மலர்களாம் இவர்கள், செப தவத்தின் சிறப்பினை அவசியத்தை நமக்கு எடுத்துக் காட்டுகின்றார்கள். செபம், அது நம் உயிர் மூச்சு, ஓர் அன்புறவு, நம்பிக்கையின் வெளிப்பாடு, செபத்தால் உள்ளம் தூய்மையாகிறது என்பதை தெளிவாக வாழ்ந்து காட்டியிருக்கிறார்கள். இவர்களே நமது தேவையில் பரிந்து பேசும், இயேசுவிடம் இட்டுச் செல்லும் கருவிகள் என உணர்ந்தவர்களாய், அவர்களின் பணிவாழ்வின் அடையாளங்களை அணிந்துக் கொள்வோம். நம்மோடு வாழும் மனிதர்களில் இருக்கும் புனிதத்தைப் புரிந்துக் கொள்வோம். புனிதத்தின் பாதையில் நாமும் வாழ முயற்சிப்போம்.

* * *

**அன்பு நிறைந்த வாசகர்களே!**

இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை செப். 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)



அருளாளர்

# ஆல்பர்ட் மர்வெல்லி

வாழ்வு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

ஏழ்மையின் விளிம்பில் இருப்போருக்கு பணியாற்றுவதில் எதையும் தியாகம் செய்ய துணிந்த ஓர் அதிவீரமான இளைஞர் அருளாளர் ஆல்பர்ட் மர்வெல்லி. இரண்டாம் உலகப் போரின் இருளில் ஒளியாய் திகழ்ந்தவர். ஏழையர்களுக்கு உதவி செய்ய இளம் வயதிலேயே கற்றுக்கொண்டவர். அவரது தாயார் எப்போதுமே, "இயேசு வந்திருக்கிறார், அவர் பசியாய் இருக்கிறார்" என்று சொல்லுவார். அவருடைய தட்டில் பாதியை ஒரு ஏழை நபருக்குக் கொடுக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொண்டார். இவரது குடும்பம் இத்தாலிய நகரமான ரிமினிக்கு 1930ல் குடிபெயர்ந்தது. அங்குள்ள சலேசிய ஆரட்டரி மற்றும் கத்தோலிக்க போராளிகளின் குழுவும் மர்வெல்லியின் விசுவாச வாழ்வைத் தட்டியெழுப்பியது. "புனிதம் - என்ற ஒரு வார்த்தையில் என் முழு வாழ்க்கையும் அடங்கியுள்ளது" என்று மர்வெல்லி கூறுவார். மர்வெல்லி தனது வளர்பருவத்தில் விளையாட்டுகளில் அதிகம் ஆர்வம் காட்டினார் குறிப்பாக சைக்கிள் ஓட்டுவதில் மிகவும் இன்புற்றார். காலப்போக்கில் 1933ல் தனது தந்தையார் மறைந்த சோகம் அவரையும் அவரது குடும்பத்தையும் ஆட்கொண்டது என்றாலும் இது மர்வெல்லியின் வாழ்வில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது என்றே சொல்ல வேண்டும். அது முதல் தனது வாழ்வைச் சிறப்பாக ஏற்படுத்திக் கொள்ள முயற்சிகள் மேற்கொண்டார். அதன் தொடர்ச்சியாக பின்வரும் ஆன்மீக அட்டவணையை தனக்காக உருவாக்கிக் கொண்டார்.

"ஒவ்வொரு காலையிலும் நான் அலாரம் ஒலித்தவுடன் எழுந்துவிடுவேன், ஒவ்வொரு நாளும் அரை மணி நேர தியானம், அரை மணி நேரம் விவிலிய வார்த்தைகளை வாசித்தல், முடிந்தவரையில் நேரத்தோடு தினமும் காலையில் திருப்பலிக்குச் சென்று நற்கருணை உட்கொள்ளுதல், ஆன்மீக வழிகாட்டுதலின் படி வாரத்திற்கு ஒருமுறை ஒப்புரவு அருளடையாளம் பெறுதல், தினமும் செபமாலைச் செபித்தல் மற்றும் மதிய நேரத்தில் மூவேளைச் செபம் சொல்லுதல்" இவை அவருக்கு 18 வயதாக இருந்தபோது எழுதப்பட்டன. போலோக்னாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் பயின்றபோது, அங்குள்ள கத்தோலிக்க குழுவில் இணைந்து சமுதாயத்திற்குப் பல்வேறு வழிகளில் தனது பணியைச் செய்தார். திருத்தூதுவ பணியில் ஆர்வம் மிகுதியாகக் கொண்டு செயல்பட்டார். பின்னர் இத்தாலிய கத்தோலிக்க இயக்கத்தின் உறுப்பினராக இருந்து, புனித வாழ்வு வாழ்ந்து அருளாளர் நிலையை அடைந்த பயிர் ஜியார்ஜியோ பிரசாத்தி என்பவரை இவர் தனது இளமைப்பருவத்தின் முன்மாதிரியாகத் தேர்ந்துக் கொண்டார். பின்னர் இரண்டாம் உலகப் போரின் தாக்குதல்களால் அங்கிருந்து குடும்பத்தோடு வேறு இடத்திற்குப் புலம்பெயர வேண்டிவந்தது. இருந்தாலும் அங்குள்ளவர்களை அப்படியே விட்டுவிட்டு செல்ல மனமில்லாத மர்வெல்லி, தாக்குதலில் காயமடைந்தவர்களுக்கு உதவுவதற்காக ரிமினிக்குத் திரும்பினார்.

இந்த செயல்பாட்டில் தனது உயிரைப் பணயம் வைத்தார். அது மட்டுமல்ல, இடிபாடுகளில் ஒரு கூடாரத்தைக் கவனித்த மர்வெல்லி, அதையும் உள்ளே இருந்த நற்கருணைப் பேழையும் காப்பாற்ற விரைந்தார். ஆனால் அதற்காக கிட்டதட்ட அவர் கொல்லப்பட்டார் என்றே சொல்ல வேண்டும். அவர் ஒவ்வொரு நாளும் இதைத் தொடர்ந்தார், ஏழைகளுக்கும் காயமுற்றோர்களுக்கும் பணி செய்வதை ஒருபோதும் நிறுத்தவில்லை. இத்தாலி மீதான நாசி படையெடுப்பிற்கு பிறகு, யூதர்கள் மற்றும் பிற இத்தாலியர்கள் உட்பட முகாம்களுக்கு அனுப்பப்படுவதையும் மர்வெல்லி அறிந்துகொண்டு அவர்கள் செல்லும் முன்னரே விரைவாகச் சென்று எல்லோரையும் விடுவித்தார். மர்வெல்லி தனது நாட்குறிப்பில் போரின் கொடுமைகளைக் குறித்து விரிவாக எழுதி வைத்திருந்தார். 1945ம் ஆண்டு ரிமினி மறைமாவட்ட ஆயர் இவரை கத்தோலிக்க நிபுணர்களை வழிநடத்தும்படி கேட்டுக் கொண்டார். இவர் தன்னுடைய அர்ப்பண வாழ்வை "கலாச்சாரம் மற்றும் பிறரன்பு" என்ற இரண்டே வார்த்தைகளில் வெளிப்படுத்தினார். நற்கருணையின்மீது ஆழ்ந்த பக்தி கொண்டு, அதன்மூலம் தனது மீட்புப் பணிக்கும், விடுதலைப்பணிக்கும் தேவையான சக்தியையும் வல்லமையையும் பெற்றார். 1918ம் ஆண்டு பிறந்த மர்வெல்லி, 1946 அக்டோபர் 5ம் நாள் நடந்த தேர்தலில் வாக்களிக்கச் செல்லும் வழியில் இராணுவ வாகனம் மோதி விபத்துக்குள்ளாகி தனது 28ம் வயதில் இறந்தார். 2004ல் முன்னாள் திருத்தந்தை புனித இரண்டாம் யோவான் பவுல் அவர்களால் மர்வெல்லி அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டது மட்டுமல்ல, திருஅவையில், "பிறரன்பின் பொறியியல் வல்லுநர்" என்ற சிறப்புப் பட்டத்தையும் பெற்றது சிறப்புக்குரியது.



# திருஅவைச் செய்திகள்

*திரு. சாண்டோ*

## புனித பூமியில் அமைதி நிலவ இத்தாலிய ஆயர் பேரவை அறிக்கை

காசாவில் உள்ள முழு மக்களுக்கும் எதிரான அனைத்து வகையான ஏற்றுக்கொள்ள முடியாத வன்முறைகளையும் நிறுத்த வேண்டுமென்றும் பணயக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமென்றும் பன்னாட்டு மனிதாபிமான சட்டம் மதிக்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தி அறிக்கை ஒன்றினை வெளியிட்டுள்ளது இத்தாலிய ஆயர் பேரவை. கிறிஸ்துவே நமக்கு அமைதி அருள்பவர். அவரே இரண்டு இனத்தவரையும் பிரிந்து நின்ற பகைமை என்னும் சுவரை, தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாய்த் தகர்த்தெறிந்து அவர்களை ஒன்றுபடுத்தினார் (எபே. 2:14) என்ற திருத்தூதர் புனித பவுலின் வார்த்தைகளால் தூண்டப்பட்டு அமைதியை வலியுறுத்துவதாகவும் எடுத்துரைத்துள்ளது இத்தாலிய ஆயர் பேரவையின் அறிக்கை. வருகின்ற அக்டோபர் மாதத்தில் அமைதிக்காக செபமாலை செபிக்க வலியுறுத்திய திருத்தந்தை அவர்களின் கருத்துக்களைச் சுட்டிக்காட்டியுள்ள அவ்வறிக்கையானது வரலாற்றின் நிகழ்வுகள் குறித்து விழிப்புடன் இருக்கவும், மரணம் மற்றும் அழிவை ஏற்படுத்தும் தேர்வுகளை விமர்ச்சிக்கவும் வேண்டுமென்று எடுத்துரைள்ளது.

## "காசாவில் அமைதி நிலவ" செபவழிபாட்டிற்கு கர்தினால் பிட்சாபால்லா காணொளிச் செய்தி

காசாவில் வாழும் மக்கள் நிகழும் சூழல் அறிந்து மனம் உடைந்து, துயரமான வாழ்க்கை நிகழ்வுகளை அனுபவிக்கின்றனர் என்றும், வன்முறையை உருவாக்கிய வெறுப்பின் சூழலால் ஆழமாக காயமடைந்துள்ளனர். உடைக்க முடியாத இந்த தீய சுழற்சி அதிக வெறுப்பை வளர்க்கிறது என்றும் எடுத்துரைத்துள்ளார் கர்தினால் பியர்பத்திஸ்தா பிட்சா பால்லா. இறைவன் நமக்குக் கொடையாக அளித்த அழகு நிறைந்த புனித பூமியை அன்பு மற்றும் சாந்த குணத்துடன் திரும்பப்பெற நாம் அனைவரும் உழைக்க வேண்டுமென்று வலியுறுத்திய கர்தினால் பிட்சா

பால்லா அவர்கள், நம் வார்த்தைகளாலும் சான்றுள்ள வாழ்வாலும் இந்த அமைதியின் வலிமையைக் கொண்டுவர எடுத்துரைத்துள்ளார். எப்போது அமைதியான சூழல் நிலவும் என்று யாருக்கும் தெரியாது. இருப்பினும் நம்பிக்கை நிறைந்த நமது எதிர்காலத்தை படிப்படியாக மீண்டும் கட்டியெழுப்ப நம்மால் முடியம், அமைதியின் நெசவாளர்களாக ஓர் துணியை நம்மால் உருவாக்க முடியும் என்கிறார் கர்தினால் பிட்சா பால்லா. நாம் நீதியைச் செய்ய வேண்டும், அனைவருக்கும் அன்புடன் உண்மையைச் சொல்ல வேண்டும். அதற்கான காலம் வரும் என்பதை வலியுறுத்தியுள்ள கர்தினால் பிட்சா பால்லா அவர்கள், "வலிமையின் மொழி தோல்வியடையும்போது வன்முறையின் இந்த முழு கோட்டையும் இடிந்து விழும்போது நாம் தயாராக இருக்க வேண்டுமென்றும் தெரிவித்துள்ளார்.

## அனைத்து மக்களையும் மதிக்கும் ஒரு வழியைக் கண்டுபிடிப்போம்

திருஅவையானது இரு அரசுகளுக்கு இடையிலான தீர்வுகளை பல ஆண்டுகளாக அங்கீகரித்து வருகின்றது என்றும் அனைத்து மக்களையும் மதிக்கும் ஒரு செயலை, வழியை நாம் கண்டுபிடிக்க வேண்டுமென்றும் எடுத்துரைத்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ. செப்டம்பர் 23, செவ்வாய் இரவு காஸ்தக் கந்தோல்போவில் இருந்து வத்திக்கான் திரும்பும் முன் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தபோது இவ்வாறு கூறிய திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் ஆயுதங்களை கீழே போட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார். பாலஸ்தீன அரசின் அங்கீகாரம் "உதவக்கூடும். பாலஸ்தீன அரசின் அங்கீகாரம் "உதவக்கூடும், ஆனால் இந்நேரத்தில் உண்மையில் செவிசாய்ப்பதற்கு இஸ்ரயேல் அரசு விருப்பம் இல்லாதிருப்பதால் உரையாடலுக்கான வாய்ப்பு தற்சமயத்தில் முறிந்துவிட்டது" என்று கூறிய திருத்தந்தை அவர்கள் "அனைத்து மக்களையும் மதிக்க ஒரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும்" என்றும் வலியுறுத்தினார்.

## அமைதிக்காக அக்டோபர் மாதத்தில் செபமாலை செபிப்போம்.

அன்புள்ள சகோதர சகோதரிகளே, அக்டோபர் மாதம் தொடங்கிவிட்டது. இது திருஅவையில் குறிப்பாக புனித செபமாலை அன்னைக்கு இந்த அக்டோபர் மாதம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு நாளும் தனிப்பட்ட முறையில், குடும்பங்களில், சமூகங்களில் அமைதிக்காக செபமாலை செபிக்க அழைத்தார் திருத்தந்தை. வத்திக்கானில் பணியாற்றுபவர்கள் தினமும் மாலை 7.00மணிக்கு புனித பேதுரு பெருங்கோவிலில் செபமாலை செபிக்க அழைத்த திருத்தந்தை அவர்கள், குறிப்பாக அக்டோபர் 11, சனிக்கிழமை மாலை 6.00 மணிக்கு புனித பேதுரு பெருங்கோவில் வளாகத்தில் சிறப்பிக்கப்படும் மரியன்னை ஆன்மீகத்தாருக்கான யூபிலி நாளின்போது இரண்டாவது வத்திக்கான சங்கம் தொடங்கப்பட்ட ஆண்டு நிறைவையும் நினைவுக்கூறும் வகையில் ஒன்றிணைந்து செபமாலை செபிப்போம் என்றார். அனைவரும் எல்லா இடங்களிலும் மீட்பின் மகிழ்ச்சியான செய்தியைக் கொண்டு செல்ல பேரின்ப உணர்வைப் புதுப்பிக்க ஊக்கமூட்டினார் திருத்தந்தை.

# சுடர் வாசகர் போட்டி 126

## சரியான விடைகள்

1. அன்னையின் ஏழு வியாகுலங்களைக் குறிக்கின்றது.
2. அருளாளர் ஜோசப் கலசான்ஸ்
3. தந்தை நிக்கோலா, தாய் திரானே
4. புனித எரோனிமுஸ் (ஜெரோம்)
5. பெண்களுக்கு புனித விசென்ட் தே பால் நிறுவியது.
6. எருசலேமில், கான்ஸ்தான்தின் நோபிளின் அன்னை எலென்.
7. "உனக்கும் பெண்ணுக்கும் உன்வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவோம்."
8. ஆசீர்வாதப்பர் சபை துறவி
9. அருளாளர் ஜோசப் கலசான்ஸ்
10. நோபல் பரிசு, பாரத் ரத்னா விருது
11. புனித எரோனிமுஸ் (ஜெரோம்)
12. ரபேல் : இறைவன் குணமாக்கினார்.
13. புனித பெலார்மின்
14. "பொன்வாய்"
15. அன்னை தெரேசா



## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

1. திரு.ஞானசேகரன், காட்பாடி
2. அருட்சகோதரி ப்ளோரன்ட் மேரி, சேலம்
3. திரு.அந்தோணிசாமி, பெங்களூரு.

# சுடர்

## வாசகர் போட்டி 127



1. “வாழும் அறநெறி” என்று அழைக்கப்பட்டவர் யார்?
2. மரம் அறுக்கும் ரம்பத்தால் அறுக்கப்பட்டு உயிர்த்துறந்த திருத்தூதர் யார்?
3. “இறைப்பராமரிப்பு புதல்வியர் சபையை” நிறுவியவர் யார்?
4. “நற்கருணை கிறிஸ்துவின் சதை, நிலைவாழ்வின் மருந்து” கூறியது யார்?
5. “மனிதரின் மீட்பே இறைவனின் மகிமை” இந்த இலக்கு யாருடையது?
6. “செபமாலை மாதா திருவிழா” என்று பிரகடணப்படுத்தியவர் யார்?
7. ஆடு, மாடுகளை உண்மையாக வைத்து முதலில் குடில் அமைத்த புனிதர்?
8. குழந்தை இயேசுவின் புனித தெரேசா, குடும்பத்தில் எத்தனையாவது குழந்தை?
9. “கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர்” யார்?
10. புனித அலோசியஸ் குவனெல்லாவை அருளாளர் நிலைக்கு உயர்த்தியவர்?
11. புனித லூக்கா எந்த வயதில் எங்கு இறந்தார்?
12. அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியாரை ஆயராக நியமித்தவர் யார்?
13. “செபமாலை தீயோனின் சக்தியை விலக்கும்” கூறியது யார்?
14. “சுற்றுப்புற சூழலின் பாதுகாவலர்” யார்?
15. குழந்தை இயேசுவின் தெரேசா எந்த வயதில் இயற்கை எய்தினார்?

## தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

இறைவார்த்தையை தீபகச் சுடர் மின்னிதழ் வழியாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியில் எங்களோடு இணைந்து பயணிப்பதற்கு நன்றி. இந்த மின்னிதழை நீங்கள் வாட்சப் மூலம் இலவசமாகப் பெற்று பிறருக்கும் பகிரலாம். இந்த பணிக்கு தன்னார்வ தொண்டர்கள் தங்கள் திறமை, நேரத்தை வழங்கி உதவலாம். முடிந்தவர்கள் நன்கொடையாகவும் தந்து இப்பணியை தாங்கலாம்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

# அடுத்த சுடரில்

பகுதி-1

## வழிபாட்டு வழிகாட்டி

புனிதர் அனைவர் பெருவிழா
இறந்த விசுவாசிகள் அனைவர் விழா
புனித மார்ட்டின் தெ போரெஸ் துறவி
புனித சார்லஸ் பொரோமியோ ஆயர்
இலாத்தரன் பேராலய நேர்ந்தளிப்பு
புனித பெரிய லெயோ-திருத்தந்தை
தூரின் நகர் புனித மார்ட்டின் - ஆயர்
புனித யோசபாத்து ஆயர்
புனித ஆர்த்தெமமெதே சாத்தி
குழந்தைகள் தினவிழா செப வழிபாடு
அருளாளர் மதலேனா மொரானோ
பொதுக்காலம் 33ம் ஞாயிறு
அங்கேரி புனித எலிசபெத்து - துறவி
திருத்தூதர்கள் பேதுரு, பவுல் பேராலயங்களின் நேர்ந்தளிப்பு
தூய கன்னி மரியாவைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் நினைவு
புனித செசிலியா - கன்னியர்
இயேசு கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழா
திருவருகைக் காலம் முதல் ஞாயிறு

பகுதி-2

## நம்பிக்கையில் வளர...

முடிவில்லா வாழ்வு பெறுபவர் யார்?
புனித ஆர்த்தெமெதே சாத்தி வாழ்வை அறிவோம்
மூவொரு உலகின் அரசர் இயேசு கிறிஸ்து
திருஅவைச் செய்திகள்

# அக்டோபர் மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 01 | பு | குழந்தை இயேசுவின் புனித தெரேசா | நெகே. 2: 1-8 | லூக். 9: 57-62 |
| 02 | வி | புனித காவல் தூதர்கள் | நெகே.8: 1-4,5-6, 7-12 | மத். 18: 1-5, 10 |
| 03 | வெ | | பாரூ. 1: 15-22 | லூக். 10: 13-16 |
| 04 | ச | அசிசி நகர் புனித பிரான்சிஸ் | பாரூ. 4: 5-12, 27-29 | லூக். 10: 17-24 |
| **05** | **ஞா** | **பொதுக்காலம் 27வது ஞாயிறு** | **I. அபக்கூக்கு 1: 2-3, 2: 2-4**<br>**II. 2திமொ. 1: 6: 6-8, 13-14** | **லூக். 17: 5-10** |
| 06 | தி | புனித புரூனோ | யோனா. 1: 1-17 | லூக். 10: 25-37 |
| 07 | செ | தூய செபமாலை அன்னை நினைவு | யோனா 3: 1-10 | லூக். 10: 38-42 |
| 08 | பு | | யோனா 4: 1-11 | லூக். 11: 1-4 |
| 09 | வி | புனிதர்கள் ஆயர் தியோனியுசு, தோழர்கள், புனித யோவான் லெயோனார்ட் | மலாக்கி 3: 13-4:2 | லூக். 11: 5-13 |
| 10 | வெ | | யோவே. 1: 13-15, 2:1-2 | லூக். 11: 15-26 |
| 11 | ச | | யோவே. 3: 12-21 | லூக். 11: 27-28 |
| **12** | **ஞா** | **பொதுக்காலம் 28வது ஞாயிறு** | **I. 2அர. 5: 14-17**<br>**II. 2திமொ. 2: 8-13** | **லூக். 17: 11-19** |
| 13 | தி | | உரோ. 1: 1-7 | லூக். 11: 29-32 |
| 14 | செ | புனித முதலாம் கலிஸ்துஸ் | உரோ. 1: 16-25 | லூக். 11: 37-41 |
| 15 | பு | இயேசுவின் (அவிலா நகர்) புனித தெரேசா | உரோ. 2: 1-11 | லூக். 11: 42-46 |
| 16 | வி | புனித எட்விஜ், மார்கரீத் மரியா அலக்கோக்கு | உரோ. 3: 21-30 | லூக். 11: 47-54 |
| 17 | வெ | அந்தியோக்கு நகர் புனித இஞ்ஞாசியார் | உரோ. 4: 1-8 | லூக். 12: 1-7 |
| 18 | ச | புனித லூக்கா நற்செய்தியாளர் | 2திமொ. 4: 9-17 | லூக். 10: 1-9 |
| **19** | **ஞா** | **பொதுக்காலம் 29ம் ஞாயிறு** | **I. விப. 17: 8-13**<br>**II. 2திமொ. 3: 14-4:2** | **லூக். 18: 1-8** |
| 20 | தி | | உரோ. 4: 20-25 | லூக். 12: 13-21 |
| 21 | செ | | உரோ. 5: 12, 15,17-19, 20-21 | லூக். 12: 35-38 |
| 22 | பு | | உரோ. 6: 12-18 | லூக். 12: 39-48 |
| 23 | வி | கப்பெஸ்த்ததரானோ நகர் புனித யோவான் | உரோ. 6: 19-23 | லூக். 12: 49-53 |
| 24 | வெ | புனித அந்தோனி மரிய கிளாரட் | உரோ. 7: 18-25 | லூக். 12: 54-59 |
| 25 | ச | | உரோ. 8: 1-11 | லூக். 13: 1-9 |
| **26** | **ஞா** | **பொதுக்காலம் 30ம் ஞாயிறு** | **I. சீராக். 35: 12-14, 16-18**<br>**II. 2திமொ. 4: 6-8, 16-18** | **லூக். 18: 9-14** |
| 27 | தி | | உரோ. 8: 12-17 | லூக். 13: 10-17 |
| 28 | செ | புனிதர்கள் சீமோன், யூதா திருத்தூதர்கள் | எபே. 2: 19-22 | லூக். 6: 12-19 |
| 29 | பு | | உரோ. 8: 26-30 | லூக். 13: 22-30 |
| 30 | வி | | உரோ. 8: 31-39 | லூக். 13: 31-35 |
| 31 | வெ | | உரோ. 9: 1-5 | லூக். 14: 1-6 |

## தீபகம் – தொன் போஸ்கோ
### நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்
வழங்கும்

# இல்லங்களில் திருவிவிலியக் கல்வி



# திருத்தூதர் பணிகள்

தயாரிப்பு : திரு. R.K. சாமி, மலேசியா
தமிழக ஒருங்கிணைப்பு : திரு. ம. அ. தேவராஜ், போன் : 90031 12385

**தீபகம்** தொன் போஸ்கோ
நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்

வழங்கும்

சென்னை சலேசிய மாநில பள்ளிகளுக்கான

# மாபெரும் திருவிவிலிய வினா-விடை போட்டி

## அக்டோபர் 2025

| | | |
|---|---|---|
| மண்டலம் 1 | வேலூரில் | 15-10-2025 |
| மண்டலம் 2 | திருப்பத்தூரில் | 24-10-2025 |
| மண்டலம் 3 | புதுச்சேரியில் | 28-10-2025 |
| மண்டலம் 4 | சென்னை (வடக்கு) | 29-10-2025 |
| மண்டலம் 5 | சென்னை (தெற்கு) | 30-10-2025 |

முதல் 3 இடங்களைப் பிடிக்கும் பள்ளிகளுக்கு கேடயமும்
இறுதி சுற்றுக்கு தகுதி பெறும் பள்ளிக்கு பரிசு கோப்பையும் வழங்கப்படும்

இறுதி சுற்றுக்கு தகுதி பெற்ற ஒவ்வொரு மண்டலத்திலிருந்தும்
ஒரு பள்ளிக்கு தீபக மறைக்கல்வி தின விழா கொண்டாட்டத்தில்
(தேதி விரைவில் அறிவிக்கப்படும்) இறுதி சுற்று நடைபெறும்.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**தீபகம்**, 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
+91 9385201453 **Deepagam Don Bosco**

தயாரிப்பு : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)
கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT
தயாரிப்பில் மேற்பார்வை : **சாண்டோ, ஈசாக்**